# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 27 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.20


## மாநிலங்களைக் கொள்ளையடித்துக் கொழுக்கிறது இந்திய அரசு..

## ஆங்கிலேயன் பறித்த வரிகளைவிட அதிகமாகப் பறிக்கிறது..!

## ஆங்கிலேயன் அயலவன் என்றால் அம்பானி, அதானி, நரேந்திர மோடி, அமித்ஷாக்கள் தமிழ்நாட்டிற்கு அயலவர்கள் இல்லையா அவர்கள் வரிகள் பிடுங்கலாமா?

ஆங்கிலேயர்கள் ஆண்டபோது.. ஜி. எஸ். டி என்றெல்லாம் இந்த அளவு வரிகள் இல்லை..

சுங்கச்சாவடிகளில் வழிப்பறிக் கொள்ளைகள் இல்லை..

ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைப் பெற்றதாக இந்திய அரசு உருவாக்கப்பட்ட 77 ஆண்டுகளில் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் வலிய இணைக்கப்பட்டதால் அடைந்து வரும் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமில்லை.

தமிழ்நாட்டுக் கல்வி உரிமையைப் பறிகொடுத்துவிட்டோம். தமிழ்நாட்டின் கனிம வளங்கள் தமிழ்நாட்டிற்கு இல்லை. நெய்வேலி நிலக்கரி, சேலம் இரும்பு, நரிமனம் கன்னெய் (பெட்ரோல்) உள்ளிட்ட அனைத்துக் கனிம வளங்களையும் இந்திய அரசு கொள்ளையடித்துக் கொண்டு போகிறது. அதற்கு மதிப்புத் தொகை (இராயல்ட) கூட தமிழ்நாட்டுக்குக் கொடுப்பதில்லை.

ஜி. எஸ். டி என்கிற பெயரில் ஆண்டுக்கு 5 இலக்கத்து 76 - ஆயிரம் இலக்கம் கோடிப் பணத்தை இந்திய அரசு கொள்ளையடிக்கிறது. சுங்கச்சாவடி வழிப்பறியில் மட்டும் இந்திய அரசுக்கு ஆண்டுக்கு ஒரு இலக்கத்து 28 ஆயிரம் இலக்கம் கோடி வருவாய் குவிகிறது..

மொத்தம் ஆண்டுக்கு 32 இலக்கம் கோடி வருவாயில் 21 - விழுக்காட்டுத் தொகையை மட்டும்தான் மாநில அரசுகளுக்கு இந்திய அரசு திருப்பித் தருகின்றது. மற்ற 79 விழுக்காட்டுத் தொகையைத் தன் அதிகாரத்திற்காகக் குவித்து வைத்துக் கொள்கிறது இந்திய அரசு.


இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட இந்திய அரசைக் கேள்வி கேட்கிற மாநிலங்களுக்கு ஒதுக்கீட்டுத் தொகை எதுவும் இல்லை.

இந்தியாவிடம் அடிமைப்படுவதற்கு முன்பு இந்திய அரசின் கையாளாய்ச் செயல்பட்டுவரும் தனியார் கல்விக் கூடங்கள் தமிழ்நாட்டில் இல்லை. கல்விக்குக் கட்டணங்கள் இல்லை. தனியார் மருத்துவமனைகள் இல்லை மருத்துவம் என்கிற பெயரில் கொள்ளையடிப்புகள் இல்லை.

கல்வியையும், மருத்துவத்தையும் நேரடியாக இந்திய அரசு தன் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு சென்றதால் ஏற்பட்ட கொடுமைகளால் எளிய மக்கள் மீள வழியின்றி அழிகிறோம்..

இந்திய அரசு என்று ஓர் அரசை அவர்கள் உருவாக்குவதற்கு முன்பு எதற்காகவும் இந்தியாவிடம் கையேந்திக்கொண்டு தமிழ்நாடு இருக்கவில்லை. தமிழ்நாட்டுப் பிள்ளைகள் மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்வி பெறுவதற்கு மட்டுமின்றி எதற்குமே இந்திய அரசிடம் தொங்கிக்கொண்டு கிடந்தது கிடையாது..

முத்துக்குளித்த, பவழப்பாறைகளில் பவழம் எடுத்த, கடல் கடந்து வணிகம் செய்த பழம் தமிழ் இனத்தினர் மீன்பிடிப்பதற்குக் கூட தொலைதூரம் செல்லக்கூடாது என்று இந்திய அரசால் தடுக்கப்படுகின்றனர்... இலங்கை அரசு சுட்டுத் தள்ளுகிறது..... கேட்க நாதி இல்லை..



தமிழ்நாட்டு வேளாண் தொழிலுக்கு இந்திய அரசு எண்ணற்ற தடைகள் போடுகிறது.. வரிகள் பிடுங்குகிறது.. தமிழ்நாட்டின் நெல்லுக்கும் கரும்புக்கும் இந்திய அரசுதான் விலைகளை உறுதிப்படுத்துமாம்..

எத்தனைக் கெடுபிடிகள்..

நீ அரிசி கொண்டு வா நான் உமி கொண்டு வருகிறேன் இருவரும் ஊதி ஊதித் தின்போம் என்ற கணக்கில் எவ்வளவு வஞ்சகம்..

எதற்காக வரிகள் கட்ட வேண்டும்?

எங்களோடு வயலுக்கு வந்தாயா? நீர் பாய்ச்சினாயா? நீ என்ன மாமனா மச்சானா? - எனப் பாளையக்காரர்களாக இருந்தவர்கள் ஆங்கிலேயனைப் பார்த்து கேட்டதையும் வரி கட்ட மறுத்துப் போராடியதால் தூக்கிலிடப்பட்டதையும் வரலாற்றில் படிக்கிறோம்... பாராட்டுகிறோம்..

ஆனால், ஆங்கிலேயன் பறித்த வரிகளைவிட அதிகமாகப் பிடுங்குகிறதே இந்திய அரசு..! எதற்காக வரிகள் கட்ட வேண்டும் என்று நாம் ஏன் கேட்காமல் இருக்கிறோம்..

ஆங்கிலேயன் அயலவன் வரிகள் எனவே அவர்கள் பிடுங்கக் கூடாது என்றால் இந்திய அரசை ஆளுகிற அம்பானி, அதானி, நரேந்திர மோடி, அமித் ஷாக்கள் அயலவர்கள் இல்லையா அவர்கள் வரிகள் பிடுங்கலாமா?

எப்போது கேள்வி கேட்கப் போகிறோம்..!

இந்தியாவுக்கு 78 ஆவது விடுதலை நாள் என்கிறார்களே.. நம் கேள்விகளுக்கு விடைகள் எப்போது.. நம் அடிமைத்தனங்களுக்கு விடுதலை எப்போது..

அவர்கள் பிடுங்கும் வரிகளை அடிமைகளாக இருந்து கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் இந்தியாவின் விடுதலை நாளின் பொருளா? எதற்கு விடுதலை நாள்?..

கேள்வி கேட்கவாவது பழகுவதுதான் எப்போது?..

கேள்வி கேட்கத் தொடங்குவோம் அவை கனைகளாக மாறட்டும்...

# சனநாயகப் படுகொலை

தங்க குமரவேல்

தமிழக மக்கள் விடுதலை இயக்கம்

கொலை என்பது ஆதிகாலம் தொட்டு மனித இனத்தில் ஒரு குற்றமாகவே உள்ளது. உலகின் பல்வேறு மதங்களின் புனித நூல்களில் கொலைகள் அவரவர் மதம் சார்ந்து நியாயப்படுத்தப்பட்டுள்ளன. வேட்டைச் சமூகத்தில் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட போரில் கொத்துக் கொத்தாய் கொலைகள் நடைபெற்றுள்ளன. அவற்றைச் சமூகப் படுகொலை என்று சொல்லலாம். அரசர்களுக் கிடையே நடைபெற்ற போர்களில் செய்யப் பட்ட கொலைகள் வீரம் என்னும் பெயரால் அழைக்கப்பட்டன. குடும்ப உறுப்பினர் களிடையே ஏற்படும் சொத்துப் பிரச்சனை, பெண்வழி உறவுச் சிக்கல், பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளிட்ட பல்வேறுப் பிரச்சனை களால் நடைபெறும் கொலைகள் எனப் பல்வேறு வடிவங்களில் படுகொலைகள் உலகம் எங்கும் நடைப்பெறுகின்றன.

சனநாயக ஆட்சிமுறை வந்தபின் போர்களால் ஏற்படும் படுகொலைகளைவிட அரசியல் கட்சிகளுக்கிடையிலானப் போட்டி யால் நடைபெறும் கொலைகள், பாலியல் வன்முறை சார்ந்த கொலைகள், போதைப் பொருள் பழக்கங்கள் சார்ந்த கொலைகள், சண்டியர் கும்பலுக்கிடையில் நடைபெறும் கொலைகள், கூலிப்படையை வைத்து நடத்தப்படும் பழிவாங்கல் கொலைகள், இவைதவிர பாலியல் உறவுச் சிக்கலால் அன்றாடம் நடைபெறும் பல கொலைகள், ஆணாதிக்கச் சமூகத்தால் பெண்கள் மீது நடத்தப்படும் வன்புணர்வுக் கொலைகள், கார்ப்பரேட் நிறுவனங்களால் நடத்தப்படும் கொலைகள் எனக் கொலைகளில் பல பரிமாணங்கள் உள்ளன.

கிருஷ்ணன் பூதகி, கம்சன் போன்றவர் களைக் கொன்றது, முருகன் தாரகாசுரனைக் கொன்றது. காளி மகிசாசுரனைக் கொன்றது என இந்து சமயக் கடவுள்கள் நடத்திய படுகொலைகள், சைவ, வைணவ சமயங்களை நிலைநாட்ட ஆசீவக, சமண முனிவர்களைக் கழுவேற்றிக் கொன்ற பெருங்கொலைகள், சைவ வைணவ சமயங்களிடையே ஏற்பட்ட மோதல் கொலைகள் என இந்து மதம் சார்ந்த கொலைகள் அவரவர் வேத நூல்களால் நியாயப்படுத்தப்பட்டன. யெகோவா என்னும் கடவுள் இசரவேலர்களுக்கு ஆதரவாக எகிப்தியர்கள் மீது இனப் போர் நடத்தி இனப் படுகொலைகளைச் செய்ததும், பைபிளில் முதல் கொலையாகக் காட்டப்படும் ஆதாம் ஏவாளின் மூத்தமகன் காயின் தனது தம்பியான ஆபேலைக் கொன்றதும், யூத பழைய ஏற்பாட்டுக்கு எதிராகப் புரட்சிச் செய்ததால் ஏசுவை யூதர்கள் கொன்றதும் கத்தோலிக்கத் திருச்சபையில் நடந்த அறிஞர்களின் படுகொலைகளும் கிருத்துவ, இசலாமிய மோதலான சிலுவைப் போர்களால் நடந்த படுகொலைகள், கிறித்துவம் சார்ந்த படுகொலைகளில் அடங்கும். எங்களுக் கென்று ஒரு ஞாய உறுதிப்பாடு (பிரமாணம்) உண்டு. அதன்படி இவன் சாகத்தான் வேண்டும் என யூதக் கும்பல் நீதிபதி பிளாத்துவை நோக்கிக் கத்திக் கலகம் செய்து ஏசுவைக் கொல்ல வழிவகுத்தனர். ஆனால் ஏசுவைக் கொல்லுவதற்கான குற்றச்சாட்டு களும் இல்லை என்பதை உணர்ந்த நீதிபதி பிளாத்து ஏசுவுக்கு மரணத்தண்டனை வழங்க மறுத்து தண்ணீர் ஊற்றி தன் இரு கைகளையும் கழுவிவிட்டு நீதிபதி பொறுப்பிலிருந்து விலகினார் என பைபிள் கூறுகிறது.

சிலை வழிப்பாட்டுக்காரர்களான அரேபியர்களை ஓர் இறைக் கோட்பாட்டின் கீழ்க்கொண்டு வந்து இஸ்லாத்தை நிலைநாட்ட முகமது நபியும், அவரது தோழர்களும் நடத்திய போர்களில் நடைபெற்ற படுகொலைகள், இஸ்லாமிய அடிப்படை வாதத்தால் நடைபெறுகின்ற தீவிரவாத இயக்கங்கள் நடத்தும் படுகொலைகள் என இஸ்லாம் சார்ந்தும் பல்வேறு கொலைகள் நியாயப்படுத்தப்படுகின்றன.

இந்திய ஒன்றியத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் அரசப் பயங்கரவாதத்தால் படுகொலை செய்யப்பட்டனர். காஷ்மீர் விடுதலைப் போராளிகள், காலிஸ்தான் விடுதலைப் போராளிகள், அசாம் விடுதலைப் போராளிகள், நாகலாந்து விடுதலைப் போராளிகள், தமிழரசன், அப்பு, பாலன் உள்ளிட்ட தமிழ்நாடு விடுதலைப் போராளிகள் போன்ற எண்ணற்றப் போராளிகளை இந்திய ஒன்றிய அரசு படுகொலை செய்தது.

உயர்கல்விக் கற்க வாய்ப்புகள் மறுக்கப்படும்போது மாணவ சமுதாயத்தினர் தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்ளும் நிலையும் கல்விசார் அரசப் பயங்கரவாதப் படுகொலைப் பட்டியலில் அடங்கும். அனிதா தற்கொலையை நாம் அந்த வகையில் சேர்க்க வேண்டும். நீட் தேர்வு என்னும் மோசடிக்கு இந்திய ஒன்றியம் முழுவதும் பல்வேறு உயிர்கள் பழியாவது இந்திய ஒன்றிய அரசின் கல்விப்படுகொலையாகும்.

தற்காலத்தில் இந்துத்துவம் என்னும் கோட்பாட்டைக்கொண்ட RSS அமைப்பால் நடத்தப்பட்ட மோகன்தாஸ் கரம்சந்த்காந்தி படுகொலை, கௌரிலங்கேஷ், கல்புர்கி போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகள் கொலை என இந்துத்துவம் சார்ந்து இந்தியாவில் கொலைகள் அதிகரித்து வருகின்றன.

இவை அல்லாமல் மேல்சாதிக் கட்டுமானத்தை காப்பாற்றிக்கொள்ள தலித்துகள் மீது நடத்தப்படும் படுகொலைகள், சாதியைக் கட்டுடைக்கும் காதலர் மீது நடத்தப்படும் ஆணவப் படுகொலைகள் என கொலைகளின் விதங்கள் பலவாக உள்ளன.


இவை அல்லாமல் ஏகாதிபத்திய நாடுகளால் தங்களுக்குச் சாதகம் இல்லாமல் உள்ள மூன்றாம் உலகநாடுகளின் தலைவர்கள் படுகொலை செய்யப்படுவதும் இதில் அடங்கும். மு. அம்மர் அல்கடாபி, சதாம் உசேன் போன்ற தலைவர்களின் படுகொலையும், ஒசாமாபின்லேடன் போன்றவர்களைக் கொன்றதும் ஏகாதிபத்திய அமெரிக்காவின் அச்சுறுத்தல் படுகொலைகளாகும்.

இந்தியாவின் தலைவர்களான இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி ஆகியோர் கொல்லப்பட்டது தேசிய இனச் சிக்கல்களில் தலையிட்டுத் தவறான அரசியல் முடிவுகளை எடுத்து, அதனால் பழிக்குப் பழியாக நடந்த படுகொலைகள் பட்டியலில் அடங்கும். இவையும் அரசியல் கொலைகள் வகைப்பட்டதாகவும், ஆலடி அருணா, தா.கிருட்டிணன், ஏழுமலை, லீலாவதி, யு.யு.ஆர். வரதராஜன் போன்றவர்கள் கொல்லப்பட்டது அரசியல் கட்சிகளிடையே ஆன மோதல்களால் நடைபெற்ற கொலைகளாகும். அந்த அரசியல் கொலை வரிசையில் பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலைச் செய்யப்பட்டுள்ளார்.

ஆம்ஸ்ட்ராங் படுகொலை அரசியல் வகையை முழுக்கச் சார்ந்தது அல்ல; கார்ப்பரேட் நிறுவனம் சார்ந்த கொலையாகத்தான் நாம் பார்க்க வேண்டும். ஆம்ஸ்ட்ராங் படுகொலைக்கு அவருடைய முன்னாள் ரவுடியிச செயல்கள் என கூறிச் சிலர் இக்கொலையை நியாயப்படுத்த பார்க்கிறார்கள். ஆம்ஸ்ட்ராங் அவர்கள் ரவுடி நிலையில் இருந்து மாறி சமுகநீதி அரசியல் வழியும் பௌத்தத்தையும் ஏற்றுக்கொண்டு ஒரு அரசியல் கட்சியின் மாநிலத்தலைவருக்கான அத்தனைத் தகுதிகளையும் பெற்றிருந்தார் என்பதே உண்மை.

பல வழக்கறிஞர்களை உருவாக்கியதோடு பல மாணவர்களின் கல்விக்காகத் தொடர் உதவிகளைச் செய்து வந்தவர் ஆம்ஸ்ட்ராங் அவர்கள். மேலும் ஆருத்ரா கோல்டு நிறுவனத்தால் ஏய்க்கப்பட்ட மக்களின் சார்பாக நின்று போராடி அவர்களின் பணத்தை மீட்டுத் தந்ததால் ஆத்திரமடைந்த அந்த நிறுவனம் ரவுடிகளைப் பயன்படுத்தி ஆம்ஸ்ட்ராங்கைப் படுகொலை செய்துள்ளது.

ரவுடி ஆர்க்காடு சுரேசைக் கொன்றவர்களுக்கு ஆம்ஸ்ட்ராங் அடைக்கலம் கொடுத்ததாகக் கருதிக் கொண்டிருந்த ஆர்க்காடு சுரேசின் தம்பி பொன்னை பாலாவின் நிலைப்பாட்டை அறிந்த ஆருத்ரா கோல்டு நிறுவனம் பொன்னை பாலாவின் தலைமையிலான ரவுடிக் கும்பலைப் பயன்படுத்தித் தனது பழியைத் தீர்த்துக்கொண்டது என்பதே உண்மை. தமிழ்நாட்டின் பல்வேறு கிராமங்களில் பெண்களிடம் அளவுக்கு அதிகமாகக் கடன் கொடுத்து அவர்களை வாழ்நாள் கடன்காரிகளாக மாற்றிவிட்டுக் கடன் தவணையைக் கட்ட தாமதம் ஏற்படும்போது ரவுடிகளை ஏவி அவர்களின் குடும்பத்தினரை மிரட்டும் நுண்கடன் நிறுவனங்களின் அடாவடிகள் அன்றாடம் நடைபெறுகின்றன. சில ஊர்களில் கொலை மிரட்டல்களும் நடக்கின்றன. மெல்ல மெல்ல தமிழ்நாட்டுக் கிராமங்கள் கார்ப்பரேட் வளையத்துக்குள் சிக்க வைக்கப்படுகின்றன. அதை எதிர்க்கும் இயக்கத் தலைவர்களுக்கும் இதேபோன்று பேராபத்து உள்ளது.



இந்நிலையில் கார்ப்பரேட் நிறுவனங்களின் சதிவலைப் பின்னலை காணத்தவறி ஆம்ஸ்ட்ராங் படுகொலையைச் சாதிய வளையத்துக்குள் அடைத்து அதைச் சுற்றித் தலித் அரசியல் என்று தொடங்கிச் சாதிய அரசியலையே மீண்டும் செய்யும் திரைப்பட இயக்குநர் பா. ரஞ்சித் போன்ற நபர்களும் சில சாதிய இயக்கத் தலைவர்களும் தங்களை அறியாமலேயே தலித்துக்களின் போர்க் குணத்தைக் காயடிக்கின்றனர். தலித் இளைஞர்கள் உண்மையான சமூக மாற்றம் வேண்டிப் புரட்சிகர கம்யூனிஸ்ட் அமைப்புகளின் பின்னால் அணிதிரள்வதைத் தடுக்கவே பா. ரஞ்சித் போன்ற நபர்களைப் பயன்படுத்தி வல்லரசிய நாடுகள் பின்னிருந்து இந்த சதி வேலையைச் செய்கின்றன.

1990-களில் அம்பேத்கர் நூற்றாண்டை ஒட்டி ஏற்பட்ட மராட்டிய தலித் எழுச்சியின் ஒரு பகுதியாகத் தமிழ்நாட்டிலும் தலித் இலக்கியம், தலித் அரசியல், தலித் பண்பாடு என்கிற கோணங்களில் தலித் விடுதலைச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. சாதியத்தை ஒழித்துக்கட்டும் புரட்சிகர நடைமுறைக்கு மாறாக எதிர்ப் பண்பாட்டுக் கூறுகளைப் புகழ்ந்து பேசுதல், தலித் சாதிகளின் உட்சாதிப் பிரிவுகளைப் புகழ்ந்து பேசுதல், அந்த உட்சாதிகளில் உள்ள அரசர்களைத் தேடுதல் எனத் தலித் அரசியல்வழி விலகல் ஆனது. சமூகத்தைச் சீரழிக்கும் பழக்க வழக்கங்களைத் தலித் பண்பாடு என வரையறுத்து ஒரு தலைமுறையே சீரழித்த "நிறப்பிரிகை" கும்பல் தலித் இளைஞர்களைத் திட்டமிட்டுக் காயடித்தது. அந்தக் கும்பலில் அ. மார்க்ஸ், ரவிக்குமார், ராஜ் கௌதமன், சிவகாமி, மிகிஷி உள்ளிட்ட பலர் இந்தப் புனிதப் பணியைச் செவ்வனே செய்தனர். அதனால் தலித் இளைஞர்கள் வழி விலகிப் புரட்சிகரத் தன்மையை இழந்து ஒன்றுக்கும் உதவாத உட்சாதிப் பெருமை பேசும் கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். அறிவியல் வழிப்பட்ட பொருள் முதல் வாதத்திற்கு முற்றிலும் பொருந்தாத தலித்துகளின் விடுதலைக்குச் சிறிதும் உதவாத உண்மைத் தன்மை இழந்து திரிபுவாத நோயால் பாதிக்கப்பட்ட நடைமுறைக்கு ஒவ்வாத கொள்கைகளைக் கொண்ட புத்த மதத்தை தலித் விடுதலைக்கான வழி எனத் தவறாக நம்ப வைத்துத் தலித்துகளை திட்டமிட்டே ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள கார்ப்பரேட் நிறுவனங்கள் நிதி கொடுத்து வளர்த்து விடுகின்றன. அந்த வலைப்பின்னல்களில் வீழ்ந்து தங்களை அறியாமல் பலியாகும் தலித் தலைவர்களின் பட்டியல் இந்தியாவில் நீள்கிறது. அதில் ஆம்ஸ்ட்ராங்கும் ஒருவர்.

பட்டியல் இன மக்களின் உட்சாதிப் பிரிவுகளை அணிதிரட்டுவதன் மூலம் விடுதலை கிடைக்கும் என நம்புவது அபத்தமானது ஆகும். அப்படி இதுவரை ஏதும் நடந்ததில்லை. எந்தச் சாதியும் தனியாகத் திரண்டு தனக்கான விடுதலையை பெற்றுக் கொண்டதில்லை. எனவே ஆம்ஸ்ட்ராங் கொலையை மையப்படுத்தி அதன் மூலம் பட்டியல் இன மக்களின் ஒரு குறிப்பிட்ட சாதித் தலைவர்களை ஒருங்கிணைக்கும் முயற்சி நடப்பதாக அறிகிறோம். இது மிகவும் பிற்போக்குத்தனமான முட்டுச் சந்தில் மாட்டிக்கொள்ளும் ஒரு முயற்சியாகும். இதனால் தலித்து விடுதலை ஒருபோதும் சாத்தியமாகாது. சாதி ஒழிப்பு சக்திகள் அனைத்துச் சாதிகளிலும் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுடன் ஒரு ஐக்கியத்தையும் அப்படிப்பட்ட அமைப்புகளுடன் ஒரு ஐக்கியத்தையும் ஏற்படுத்திக் கொள்வதன் மூலமாகவே சாதி ஒழிப்பு சாத்தியமே தவிர சாதிய ரீதியான அணித்திரட்சிகள் ஒருபோதும் பயன் தராது. தலித் சாதிகள் உட்பட பிற்படுத்தப்பட்ட, மிக பிற்படுத்தப்பட்ட வேறு எந்த சாதிகளுக்குமே இது பொருந்தும். சாதி ஒழிய வேண்டும் என்று நினைக்கின்ற அனைத்துச் சாதியைச் சேர்ந்தவர்களும் சாதி ஒழிப்பு இயக்கங்களின் பின்னால்தான் அணிதிரள வேண்டும்.

தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமையை ஏற்கும் மார்க்சிய இலெனினிய புரட்சிகரக் கோட்பாட்டை ஏற்றுப் புரட்சிகரக் கம்யூனிச அமைப்புகளின்கீழ் அணிதிரளும் போர்க்குணம் மிக்க தலித் இளைஞர்களைத் திசைதிருப்பிப் போகாத ஊருக்கு வழிகாட்டும் இந்திய அளவிலான தலித் தேசம் கேட்கும் போலி அரசியல் மனநிலையை புத்தமதத்தை ஆதரிக்கும் தலித் இயக்கங்கள் செவ்வனே செய்கின்றன. இது மிகவும் ஆபத்தான போக்காகும். புத்த மதம் அரசு மதமாக மாறி தன் அகிம்சைக் கொள்கை இழந்து இனப்படுகொலைக்கு துணைபோகும் அவல நிலையை அடைந்து பலகாலம் ஆகிறது. அந்தக் காலாவதியாகிப் போனக் கோட்பாட்டைத் தலித் விடுதலைக்கான கருவி என்று கருதவைப்பது சமூக அரசியல் பெரும் குற்றமாகும். எந்த ஒரு தத்துவமும் மத நிலையை அடையும் போது அது விடுதலைக்கான கோட்பாடாக இருக்காது. அடிமைத்தனத்துக்கே அச்சாரம் போடும். அறிவியல் வழிபட்டு நிரூபிக்கப்பட்ட உண்மைகளை மட்டுமே ஏற்றுக்கொண்டும் மாற்றம் ஒன்றே மாறாதது என்னும் உண்மையை ஏற்றுக்கொண்டும் இயங்கும் சமூக விஞ்ஞான கோட்பாடான மார்க்சியமும், இலெனினியமும் மட்டுமே தலித் விடுதலை உள்ளிட்ட அனைத்து வகை விடுதலைக்கும் அருமருந்தாகும்.

---

# மூன்று கொடிய குற்றவியல் சட்டங்களைத் திரும்பப் பெறு!

மோடி அரசின் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்த்து, தமிழ்நாடு  புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த வழக்குரைஞர்கள், தில்லி ஜந்தர் மந்தரில் திரண்டு போராட்டம் நடத்தினர். மனித உரிமைகளுக்கு எதிரான மூன்று கொடிய குற்றவியல் சட்டங்களை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என முழக்கங்களை எழுப்பினர். இதில், ஆயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

பாஜக அரசானது, 1860ஆம் ஆண்டின் இந்தியத் தண்டனைச் சட்டத்திற்குப் (IPC) பதிலாக பாரதீய நியாய சன்ஹிதா (BNS), 1973ஆம் ஆண்டின் குற்ற வியல் நடைமுறைச் சட்டத்திற்கு (CrPC) பதிலாக பாரதீய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS), 1872-ஆம் ஆண்டின் இந்திய சாட்சியச் சட்டத்திற்குப் (மிணி கிரீமீ) பதிலாக பாரதீய சாக்ஷிய அதினியம் (BSA) ஆகிய புதிய சட்டங்களை கொண்டு வந்துள்ளது. இதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தி வருகின்ற னர்.

முந்தைய குற்றவியல் சட்டத்தில் (Cr.PC) ஒருவரை ரிமாண்ட் செய்யும் அதிகாரம் நீதித்துறை நடுவருக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்த நிலை யில், தற்போதைய புதிய சட்டம் (BNSS) பிரிவு 187, நிர்வாகத்துறை நடுவருக்கும் (வட்டாட்சியர்) ரிமாண்ட் அதிகாரத்தை வழங்கியுள்ளது. இது ஆட்சியாளர் களுக்கு பிடிக்காதவரை, சட்டவிரோத காவலில் வைக்க சட்டப்படியான அதி காரத்தை தருகிறது. இதன்மூலம் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற பெருநகர நீதிமன்றங்கள், மாவட்ட உதவி அமர்வு நீதிமன்றங்கள் புதிய சட்டத்தில் நீக்கப்பட்டுள்ளன. நீதி மன்றங்களின் அதிகாரம் மற்றும் மாண்பு சிதைக்கப்பட்டுள்ளது.

ஒருவரை 14 நாட்கள் மட்டுமே ரிமாண்ட் செய்ய முடியும் என்ற நிலையில், புதிய சட்டம், நீதிபதி முன்பு ஆஜர்படுத்தாமலேயே 90 நாட்கள் வரை ரிமாண்ட் செய்ய வழி ஏற்படுத்தியுள்ளது. அதேபோல, சனநாயக ரீதியில் நடக்கும் தர்ணா, மறியல், ஆர்ப்பாட்ட நிகழ்வின்போது காவல்துறையுடன் ஏற்படும் தள்ளுமுள்ளுகளுக்குப் புதிய தண்டனைச் சட்டம் பிரிவு 131ன்படி வழக்கு போட்டு இரண்டு ஆண்டு வரை சிறைத் தண்டனை வழங்க வகை செய்கிறது.

புதிய சட்டப்பிரிவு 172ன்படி காவல்துறை அதிகாரியின் வழி காட்டுதலை மீறும் நபரை அடைத்து வைக்கலாம், சிறைப்படுத்தலாம், வெளியேற்றலாம் என எல்லையில்லா அதிகாரத்தை வழங்கியுள்ளது. இதன் மூலம் போலீஸ் அடக்குமுறை ராஜ்ஜியத்திற்கு வழிவகை செய்துள்ளது. இதுபோன்ற பல்வேறு சட்டப்பிரிவுகள் மனிதஉரிமை, சனநாயக உரிமைகளுக்கு எதிராகவும் ஆளும் வர்க்கத்தின் அடக்கு முறைக்கு ஆதரவாகவும் உள்ளன.

இவ்வாறு மூன்று புதிய குற்றவியல் சட்டங்களும் அரசியலமைப்பிற்கு விரோதமானவை. மொழி உரிமை, மாநில அரசுகளின் உரிமை, கூட்டாட்சித் தத்துவம், மக்களின் சனநாயக உரிமைகளுக்கு எதிரானவை. நீதிமன்றங்களின் அதிகாரத்தைக் குறைத்து, ஆளும் வர்க்கத்திற்கும், காவல்துறை, அரசு நிர்வாகம் உள்ளிட்ட அவர்களின் அடக்குமுறைக் கருவிகளுக்கு மிருகபலத்தை வழங்குகின்றன. மத வெறியர்களுக்கு சாதகமாகவும் உருவாக்கப்பட்டுள்ளன என்று சட்ட வல்லுநர்கள், மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் போராடி வருகின்றனர்.

செய்தி: வழக்கறிஞர் **தயாநிதி**

# தமிழ்நாடும்.... தமிழீழமும்.....

# இணைய இயலாத புள்ளிகளும், இணைய வேண்டிய புள்ளிகளும்

பொழிலன்
தமிழக மக்கள் முன்னணி

2009-க்குப் பிறகு தமிழீழ அரசியலிலும், தமிழ்நாட்டு அரசியலிலும் மிகப் பெரும் குழப்படிகள் நடந்து கொண்டுள்ளன.

அந்தக் குழப்படிகள் இரண்டு தேசிய இனங்களின் விடுதலைக்கும் இடர் விளைவிப்பனவாக உள்ளன.

முதலில் தமிழ்நாடு, தமிழீழம் - இரண்டும் தனித்தனித் தேசிய இனங்கள் என்பதையும், இரண்டின் போராட்டங்களும் தனித்தனியானவை என்பதையும், இரண்டின் வேறுபட்ட அரசியலின் முதன்மை எதிரிகளும், நண்பர்களும், போராட்ட ஆற்றல்களும், நட்பு ஆற்றல்களும் வெவ்வேறானவர்கள் என்பதையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இரண்டு தேசங்களின் மக்களும் தமிழர்கள் என்பதால் இரண்டு தேசங்களின் தமிழர்களுக்கும் எதிரிகளும், நண்பர்களும் ஒருவருக்கு எவரோ அவரே மற்றவருக்கும் என ஆகிவிட முடியாது.

உலகம் முழுக்க உள்ள தமிழர்கள் அனைவருக்கும், ஒரே வகை அரசியல், ஒரே வகைப் பொருளியல், ஒரேவகை வாழ்வியல் தேவைகளும், போராட்டத் தேவைகளும் இருப்பதில்லை.

அமெரிக்கவாழ் தமிழர்களும், ஆசுத்திரேலியாவாழ் தமிழர்களும், கனடாவாழ் தமிழர்களும் அரசியல்வழி, பொருளியல்வழி வேறுபட்டவர்கள்.

அதேபோல்தான் சிங்கைவாழ், மொரீசியசுவாழ் தமிழர்களின் நிலைகளும்....

அவ்வளவு ஏன் கருநாடகத்தில் வாழ்கிற தமிழர்களுக்கும், மும்பை உள்ளிட்ட மராட்டியத்தில் வாழ்கிற தமிழர்களுக்கும் ஒரே வகை அரசியல், பொருளியல் வாழ்நிலைகள் இருப்பதில்லை.

எனவே மும்பைவாழ் தமிழர்களின் அரசியல், பொருளியல் தேவைக்காக உரிமைகளுக்காகக் கருநாடகம் வாழ் தமிழர்கள் போராட இயலாது. அரசியல், பொருளியல் வழிமுறைகளைப் பயிற்றுவிக்க முடியாது.

கருத்துரைப்பது வேறு; வழிநடத்துவது வேறு. யாரும் யாருக்கும் கருத்துரைக்கலாம்; துணையாகவும் இருக்கலாம். ஆனால், வழி நடத்துவதற்கு அந்த அந்தத் தேசிய இனத்தின் வாழ்வியல், அரசியல், பொருளியலோடு ஒன்றிணைந்தால்தான் இயலும்.

அந்த நிலைகள்தாம் இன்றைக்குத் தமிழ்நாட்டிலும், தமிழீழத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன.

**தமிழீழத் தேசத்தையே தம் தேசமாகக் கருதிய தமிழ்நாட்டுத் தமிழர்கள்**

தமிழீழ விடுதலைப் போராட்ட எழுச்சிகள் தொடங்கிய காலத்திலிருந்தே தமிழ்நாட்டு உரிமை இயக்கங்களும், மக்களும் தம் சொந்த இனத்தேசத்தின் மக்களாக அவர்களைக் கருதி அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வந்திருக்கின்றனர்.

இயக்கங்கள் மட்டுமன்றி, தமிழ்நாட்டு மக்களே இயல்பாகத் தமிழீழ விடுதலை இயக்கங்களுக்குத் துணை நின்றனர்; தோள் கொடுத்தனர்; பலர் தங்கள் வாழ்க்கையையே கொடுத்தனர்.

தங்கள் முழு உழைப்பையும் தமிழ் ஈழத்திற்காகக் கொடுத்தவர்கள் எண்ணற்றவர்கள். தங்களின் பிள்ளைகளை ஈழ ஆதரவுக்காகக் கொடுத்தவர்களும் பலர்.

தங்களின் உழைத்துக் காய்ந்த தலைக்கு எண்ணெய் வைப்பதற்கு இருக்கிறதோ இல்லையோ ஈழத் தமிழர்களின் இன்னல் தீரவேண்டும் என இருந்ததை வாரிக் கொடுத்த குடும்பங்கள் பல.

தமிழீழ ஆதரவுக்காகத் தன் உயிரையே கொடையாகத் தீயிற்குக் கொடுத்த ரவூப் - தொடங்கி எண்ணற்றோர் ஈகியர்களாயினர்.

அத்தகைய ஈக உணர்வு இன்றும் மாறவில்லை.

தன் தமிழ்நாட்டுத் தேசிய இனம் உரிமையோடு இல்லையே என்று உணர்ந்தாலும், முதலில் தமிழீழம் மலரட்டும்; பிறகு நம்மைப் பார்த்துக் கொள்ளலாம் எனும் ஈக அறவுணர்வு கொண்டவர்களாகத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் இருந்தனர்; இருந்து வருகின்றனர்.

ஆயினும் அவர்கள் அரசியலாக இன்னொன்றைச் சிந்திக்க மறந்தனர்.

**தமிழ்நாட்டின் மீதான அடக்குமுறைகள் அதிகம்**

தமிழீழத்தைக் காட்டிலும் தமிழ்நாடு அடிமைத் தேசமாக இருக்கிறது என்பதை அறிய மறந்தனர்.

தமிழ்நாட்டை அடிமைப்படுத்தியிருக்கும் இந்திய அரசக் கட்டமைப்பு என்பது வல்லரசிய அதிகார வெறியோடு மட்டுமன்றி இந்தியப் பார்ப்பனிய அதிகார வெறியோடும் இணைந்தது.

ஆரியப் பார்ப்பனிய வெறியின் உள்ளடக்கம் என்பது ஒரு பக்கம் மேலிருந்து அதிகாரம் செலுத்தி அடக்கி வைத்திருக்கிற பாசிச வன்முறையுடையது மட்டுமன்றி, உள்ளிருந்தே அரித்து அழிக்கிற கரையான் வகை சார்ந்த நடைமுறையுடையதும் என்று விளங்கிக் கொள்ள வேண்டும்.

அத்தகைய கரையான் வகை அழிப்பு வேலைகள் சில ஆயிரம் ஆண்டுகளாக நடந்து வந்ததன் விளைவாகத்தான் தமிழினம் திரிந்து தெலுங்கினமாகவும், கன்னட இனமாகவும், மலையாள இனமாகவும் மாறிப் போய்விட்டதை உணர வேண்டும்.

இன்று பெயருக்காகவாவது தமிழ்நாடு ஓர் அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருப்பதால் அந்த வகையில் தமிழைத் திரிக்கிற வேலையையோ, தமிழினத்தை அரிக்கிற வேலையையோ எளிதே அவர்களால் செய்ய முடியவில்லை என்றாலும் தமிழினத்தை அதன் வீறுணர்வைச் சிதைக்கிற, அதன் ஒருங்கிணைவைக் கூறுபடுத்துகிற அனைத்து வேலைகளையும் ஆரியப் பார்ப்பனியம் சாதி, சமயம், மூடநம்பிக்கைகள், பண்பாட்டுச் சிதைவுகள் - எனப் பல முனைகளின்வழி செய்து வருகிறது.

இத்தகைய வகையில் இந்தியப் பார்ப்பனிய ஆரியம் செய்துவந்திருக்கிற, வருகிற கொடுமை நிலைகள் கடந்த காலங்களில் தமிழீழத்தில் இல்லை என்பதை ஆழ்ந்து அறிய முடியும். தமிழீழ மக்களின் மீது வெளிப்படையான அரசியல், பொருளியல் அடக்குமுறைகள் இருந்தன என்றால், தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு வெளிப்படையான அரசியல், பொருளியல், வாழ்வியல் அடக்குமுறைகளோடு ஆரியத்தால் கீழ் அரித்துச் சிதைக்கிற மறைமுக அடக்குமுறைகளும் அதிகம்.

**தமிழ்நாட்டுரிமைப் போராட்டங்களுக்குத் தமிழீழத்தில் ஆதரவு...?**

இந்நிலையில், இன்னொன்றையும் உணர வேண்டும். அதாவது தமிழ்நாட்டின் தமிழர்கள் தமிழீழத்திற்கு - அதன் விடுதலை உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்ததுபோல், தமிழ்நாட்டின் அரசியல் உரிமைப் போராட்டங்களுக்குத் தமிழீழத் தமிழர்கள் ஆதரவு தெரிவித்ததில்லை.

ஆதரவு தெரிவிக்காதது மட்டுமன்றி, தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கு என்ன தேவை இருக்கிறது என்கிற கருத்துருக் கொண்டிருந்தவர்களாகவே, கொண்டிருப்பவர்களாகவே தமிழீழத் தமிழர்களும், அவர்களுக்கான பெரும்பான்மை இயக்கங்களும் கருத்துகொண்டு இருந்தன, இருக்கின்றன.

தமிழீழத்திற்கு ஆதரவு தெரிவித்துத் தமிழ்நாட்டில் நடந்த பல்லாயிரக்கணக்கான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் போலவோ, ஈகங்களைப் போலவோ, தமிழ்நாட்டின் உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவாகத் தமிழீழத்தில் சில போராட்டங்கள் அளவிலாவது நடந்திருக்கின்றனவா - என்று கேட்டுப் பார்த்தால் ஏமாற்றமே தோன்றும்.

ஈழத்தைச் சார்ந்த தலைவர்கள் இந்தியப் பார்ப்பனிய அதிகார வகுப்பின் தலைவர்களோடு இணைவதும், ஆதரவு வேண்டுவதும், ஈழ இந்திய நட்புறவை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டதும், மேற்கொள்வதும் எவ்வளவு பெரிய பிழையானது என்று அவர்கள் சிந்திப்பதில்லை.

தமிழ்நாட்டு உரிமை இயக்கம் எவையும் தமிழ்நாட்டு உரிமைகளுக்காகச் சிங்கள அரசோடு இணைந்தால், ஆதரவு கேட்டால், தமிழ்நாட்டு ஸ்ரீலங்கா நட்புறவுக் கழகம் என அமைத்தால் - அது எவ்வளவு பெரிய

பிழையோ? - அதுபோல்தான் அவர்கள் செய்வதும் பெரும்பிழை என்று அவர்கள் உணரவில்லை.

இந்த இடத்தில் இன்னொரு பெரும் அரசியல் பிழையையும் இணைத்து எண்ணிப் பார்ப்பது நல்லது.

தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள் சிலர் இந்திரா காந்தி இருந்திருந்தால் தமிழீழம் கிடைத்திருக்கும் என்றும், பாஜகவின் வாஜ்பேய் காலத்தில் ஜார்ஜ் பெர்னாண்டசும், ஜத்வந் சிங்கும் தமிழீழத்தைப் பெற்றுத் தந்துவிட முனைந்தார்கள் என்பதாகவும் நம்பிக் கொண்டிருந்ததோடு, அவ்வாறான கருத்தைப் பரப்பவும் செய்தார்கள் என்று அறியும்போது, தமிழீழ உரிமைப் போராட்ட ஆதரவு அரசியலிலும், தமிழ்நாட்டு விடுதலைப் போராட்ட அரசியலிலும் உள்ள அவர்களின் பிழைகளை உணர்ந்து கொள்ள முடியும்.

**இந்திய அரசை எதிர்க்கும் நோக்கம் இல்லை!?**

தமிழ்நாட்டின் உரிமைப் போராட்டங்களையே ஆதரிக்காத தமிழீழ விடுதலை இயக்கங்கள், இந்திய அதிகார வகுப்பின் அரசு அதிகாரங்களுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த எந்தத் தேசிய இன விடுதலைப் போராட்டங்களையும் ஆதரித்ததில்லை.

இராசீவ் ஆட்சிக்காலத்தில் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (சார்க்) - எனும் அமைப்பைத் தொடங்கி, இந்தியா, பாக்கிசுதான், வங்காளம், நேபாளம், இலங்கை, ஆப்கானிஸ்தான், பூட்டான், மாலத்தீவு உள்ளிட்ட அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டன போல் பஞ்சாப், நாகலாந்து, மிசோரம், அசாம், மணிப்பூர், காசுமீரம், நேபாளம் - உள்ளிட்ட விடுதலைப் போராட்ட இயக்கங்களோடு தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் இணைய வேண்டி எடுக்கப்பட்ட முயற்சிகளுக்குத் தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஒப்புக்கொள்ளாமல் போயின. அதற்கு அவர்கள் அப்போது கூறிய காரணம் - இந்திய அரசை எதிர்த்த செயற்பாடுகளில் நாங்கள் பங்கேற்கும் நோக்கங்கொண்டிருக்கவில்லை என்பதே....

**சரி. இப்போதைய நிலை என்ன?**

அப்படியான கடந்த கால அரசியல் நிலைகளிலிருந்து அப்போக்குகள் இன்றைய சூழலில் என்னவாக உள்ளன என்பதும், எதை நோக்கி நகர்கின்றன என்பதும், இப்போது என்ன வகையில் செயற்படலாம் என்பதும் - ஆய்வுக்குரிய அடிப்படைத் தேவையான செய்திகள்....

இன்றும் நிலைகள் பெரிதாக மாறிவிடவில்லை. முன்பை விட பின்னடைவாகவே இருக்கின்றன.

2009 - முள்ளிவாய்க்கால் பேரழிவையொட்டித் தமிழ்நாட்டில் நடந்த பேரெழுச்சியைப் புரட்சிவயக் கட்சிகள் உள்ளிட்டு எவையுமே முன்னெடுத்துப் புரட்சிவய நிலையில் சரியாக நகர்த்திவிடவில்லை.

அவ்வளவு ஏன் அந்த நேரத்தில் நடந்த பேரெழுச்சி, கட்டுக்கடங்காத மக்கள் எழுச்சியாக மாறிக்கொண்டிருந்த சூழலில் பிரபாகரன் தப்பிவிட்டார். அவர் இறக்கவில்லை; உயிரோடுதான் இருக்கிறார் - என்று ஒரு செய்தியை ஈழ விடுதலைக்கான ஆதரவுச் செயற்பாடுகளுக்கே தாங்கள்தான் எனும் நிலையுடையவர்கள் அறிவித்ததும், அதனால் போராட்ட எழுச்சிகள் மட்டுப்பட்டுப் போனதையும் தமிழ்நாடு அறியும். இன்றுவரைகூட பிரபாகரன் உயிரோடுதான் இருக்கிறார் எனும் செய்தியை அவர்களால் உலவவிட முடிகிறது.

இவை ஒருபுறம் இருக்க..

தமிழீழ விடுதலைக்கு, உரிமைப் போராட்டங்களுக்கு யாரெல்லாம் எதிரிகள், எப்படி அடுத்தக் கட்ட நிலைகள்... என்பன பற்றியதான சிந்தனைகளும் செயல்களும் தேங்கி மழுங்கிப் போய்விட்டன. நாடு கடந்த தமிழீழத் தமிழர்கள் அனைவரையும் இணைத்த வாக்கெடுப்பில் தமிழீழத்தை வெல்லலாம் என்று கருதப்பட்டு வருவதோடு சரி. ஐரோப்பா, கனடா, ஆசுத்திரேலியா - என மேலை, கீழை நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் எவரும் இனி தமிழீழ நாட்டிற்குத் திரும்பி வந்து வாழும் நோக்கில் இல்லை. அதுபோல் தமிழீழ விடுதலைக்காக இயக்கம் கட்டிப் போராடும் நோக்கிலும் அங்கிருப்போரெல்லாம் இருப்பதாக அறிய இயல முடியவில்லை.

இந்நிலையில், முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு யார் காரணம் என்றொரு கேள்வி எழுப்பப்படுவதில், - அவற்றுக்கெல்லாம் காரணம் காங்கிரசும் கருணாநிதியும்தான் என்னும் கருத்து பரப்பப்படுகிறது. அதோடு நின்றிடாமல் மேலதிகமாகக் கருணாநிதி ஆட்சி, அன்றைக்கு இருந்தது என்றும், அவர் முழுமையாக அப் பேரழிவைத் தடுத்து நிறுத்தாததற்குக் காரணம் கருணாநிதி பிறப்பு தமிழ்க் குடி பிறப்பில்லை என்பதாக ஒரு புதிய கண்டுபிடிப்பு பரப்பப்பட்டு - அதை அடிப்படையாக வைத்துப் பிறப்பு வழி இன அடையாளத்தைச் சுட்டி அரசியல் அறுவடை செய்யத் தொடங்கியிருக்கின்றன சில கட்சிகளும், இயக்கங்களும்..

முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு மட்டுமன்றி, தமிழீழக் கருத்துருவாக்கத்தை, அதற்கான போராட்ட எழுச்சிகளை, இயக்கங்களைப் பல கோணங்களில் நகர்த்தியதில், இறுதியாகத் தமிழீழத் தமிழர்களை அழித்த நிகழ்வுகள் வரை இந்திய வல்லாட்சி ஒரு பெரும் காரணம் என்பதை ஆழ்ந்தோர் அறிய முடியும்.

திம்புப் பேச்சு - எனத் தொடங்கி தமிழீழ விடுதலைக்கான பல இயக்கங்களை ஒன்றுக்கு எதிராக மற்றொன்றைப் பகைமைப்படுத்தியது, மோத விட்டது, சிங்கள அரசோடு முழு இணக்கமாக இருந்து தமிழீழ இயக்கங்களை ஒவ்வொன்றாக அழித்தது, இந்திய அமைதிப்படை என்ற பெயரில் தமிழர் அழிவுப்படையை ஈழத்துக்கு அனுப்பியது, ரா - எனும் உளவு அமைப்பை உருவாக்கிக் கொண்டு தமிழீழ இயக்கங்களையும், தமிழ்நாட்டில் தமிழீழ ஆதரவுச் செயற்பாடுகளையும் சூழ்ச்சியாக நசுக்கியது. தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு சார்க் (Saarc) அமைப்பை உருவாக்கித் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டதுடன், எங்கெல்லாம் விடுதலைப் போராட்டங்கள், உரிமைப் போராட்டங்கள் நடைபெறுகின்றனவோ அவற்றையெல்லாம் அனைத்து அரசுகளும் கூட்டாக இணைந்து அழிப்பது - என்றெல்லாம் தொடர்ந்து இந்திய அரசுத் திட்டமிட்டு எதிராகச் செயற்பட்டு வந்தது; வருகிறது.

**முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு மட்டுமன்றி, தமிழீழக் கருத்துருவாக்கத்தை, அதற்கான போராட்ட எழுச்சிகளை, இயக்கங்களைப் பல கோணங்களில் நகர்த்தியதில், இறுதியாகத் தமிழீழத் தமிழர்களை அழித்த நிகழ்வுகள் வரை இந்திய வல்லாட்சி ஒரு பெரும் காரணம் என்பதை ஆழ்ந்தோர் அறிய முடியும்.**

பஞ்சாப் விடுதலைப் போராட்டத்தை, காசுமீர விடுதலைப் போராட்டத்தை, நாகலாந்து, மிசோரம், அசாம், மணிப்பூர் விடுதலைப் போராட்டங்களை அந்த வகையில்தான் நசுக்கியது.

உலக அளவில் காசுமீரத்தில் குவிக்கப்பட்டுள்ள படைத்துறையின் எண்ணிக்கையும், அழிவும்தான் அதிகம் - என்று ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.

ஆக, தேசிய இன உரிமை எழுச்சிகளை வல்லரசுகளும், இந்திய வல்லாட்சி அரசும் எப்படி எல்லாம் அழித்து வருகின்றன என்பதை அறியாமல் அறுப்பவனையே நம்பி ஏமாறும் ஆடுகளாய் இந்திய வல்லாட்சி அரசிடம் அணுக்கப்படுத்திக்கொள்ளும் தமிழ் ஈழ இயக்கங்களின், தலைவர்களின் நிலைகளை என்னவென்று சொல்லுவது?

இன்றைக்குக் காசுமீரத்திலும், இலங்கையிலும் அமைதி திரும்பி வருவதாக அறிவிக்கிறார்கள் இந்திய ஆண்டைகள்.

**அறுப்பவனை நம்பி ஏமாறும் ஆடுகள்**

முள்ளிவாய்க்கால் பேரழிப்பால் நிலைகுலைந்து போன தமிழீழப் பகுதிகளைச் சீரமைப்பதில் இந்தியா அதிகமாகக் கவனம் செலுத்தி வருவதாகக் கருதுகின்றனர் ஈழத் தமிழ்த் தலைவர்கள்.

அண்ணாமலை உள்ளிட்ட பாஜக, ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத் தலைவர்கள் இலங்கைக்குள் ஊடுருவி மேய்ந்து வர அவர்களைக் காவிக் கம்பளம் போட்டு வரவேற்கிறார்கள்.

இந்திய அரசு வீடுகள் கட்டித் தருகிறதாம், தொடர்வண்டிப் பாதைகளைச் சரி செய்து சீரமைக்கிறதாம், அம்பானி அதானிகளும் பிறரும் தொழில் தொடங்க வழி அமைத்துத் தருகிறதாம். தங்களைச் 'சைவர்'களாகக் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு வரை பெருமைப் பேசி வந்த ஈழத் தமிழ்ச் சிவனியர்கள் இன்று **இந்துகள்** என்ற போர்வைக்குள் வந்துவிட்டனராம். அத்தகைய சிறப்பை விசுவ இந்து பரிசத் உருவாக்கிக் கொடுத்து வருகிறதாம்.

தமிழீழத் தலைவர்கள் பலர் இவற்றிலெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்; மகிழ்ச்சி அடைகின்றனர்.

தமிழீழம் என்கிற மிக மிகக் குறைந்த அளவு அதிகாரங்கள் கொண்ட தமிழ்நாடு போல் ஒரு மாநில அரசை இப்போது இல்லாவிட்டாலும் விரைந்து இந்திய அரசு இலங்கையில் உருவாக்கிக் கொடுத்து விட்டால், தலைமுறை தலைமுறையாக இந்தியாவுக்கு அடிமைப்பட்டயம் எழுதிக் கொடுக்க தமிழீழத் தலைவர்கள் அணியமாக இருக்கிறார்கள்.

அந்த நோக்கில்தான் தமிழீழத் தலைவர்களுக்கு இன்றைய அரசியல் வழிகாட்டிகளாக விசுவ இந்து பரிசத்தும், ஆர்.எஸ்.எஸ்.வும் இருக்கின்றன.

எனவே, இந்தியாவில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலும் பாஜக வலுப்படுவதை தமிழீழத் தலைவர்கள் நல்லது என்றே கணிக்கிறார்கள்.

காங்கிரசை விட பாஜக நல்லது என்பது அவர்களின் கருத்து. காங்கிரசோடு உறவு கொண்டு திமுக - பாஜகவை பகைக்கிறது... எனவே காங்கிரசும் திமுகவும் அழிந்துவிட்டால் தமிழீழ மாநிலத்திற்கு வழி கிடைத்துவிடலாம் என்பதாகக் கணிக்கிறார்கள்.

இந்தக் கணிப்பின் வழியான அரசியலையே தமிழீழத் தலைவர்களும், தமிழீழத்திற்குத் தாங்கள்தாம் எல்லாமும் என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் தமிழ்நாட்டுத் தலைவர்கள் சிலரும் தமிழ்நாட்டிற்குள்ளும் பரப்புகின்றனர்.

இந்த அரசியலை வலுப்படுத்திக் கொள்வதற்காகவே நச்சுத்தனமான ஓர் அரசியலை மேற்கொள்கின்றனர்.

அவர்களின் அந்த நச்சுத்தன அரசியலைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்பு இன்னொரு விளக்கத்தையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டின் விடுதலைக்கு அல்லது தன்னாட்சி அதிகாரப் போராட்டத்தை வென்றெடுப்பதற்கு மாறாக அந்த நோக்கங்கள் பின்னடைந்து போகிறபடி திமுக செய்த தவறுகள் பல உண்டு. திமுக மட்டுமன்றி, அந்த நோக்கங்களைப் பேசிவந்த பிற கட்சிகள், இயக்கங்கள், தலைவர்கள் எல்லாமே ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு காலத்தில் தவறிழைத்திருப்பதையும், தடம் மாறிப் போனதையும் விரிவாக ஆய்வு செய்தால் உணரலாம்.

அவ்வாறெல்லாம் செய்த தவறுகளுக்கும், தடம் மாறிப் போனதற்கும் ஆன காரணங்களை ஆய்வு செய்வது மிகமிக முகாமையானது. அப்படியான ஆய்வுகள் இனியேனும் சரியான நிலைகளில் முன்னேறிச் செல்வதற்கான வழியை அது அமைக்கும்.

**திராவிடத்தேசம் என்றோ திராவிட நாடு என்றோ எவரும் இப்போது கேட்கவில்லை. அப்படி ஒரு தேசத்தை உருவாக்கவும் முடியாது. அப்படி ஒரு திராவிட நாட்டையோ, திராவிடத் தேசத்தையோ திமுக இப்போது கேட்பதாகவும் யாரும் சொல்லவும் முடியாது.**

ஆனால், அத்தகைய ஆய்வைத் தமிழ்நாட்டுக் குமுக, அரசியல், பொருளியல் அடிப்படையிலான இயங்கியல் ஆய்வாகச் செய்தாக வேண்டுமே அல்லாமல், பிறப்புவழி இனப் பார்வையளவில் செய்வது என்பதே அந்த நச்சுத்தன அரசியலாக இருக்கிறது.

தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட நோக்கங்களிலிருந்து திமுக நழுவிவிட்ட இடங்களையும் நிலைகளையும் திறனாயத்தான் வேண்டும். திமுகவின் தலைவர்கள் செய்த அந்த கொள்கைப் பிழைகள், நடைமுறைப் பிழைகள் எல்லாம் அது ஏற்றுக் கொண்ட இந்திய அரசமைப்பின் சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தலில் பங்கேற்று ஆட்சிக் கட்டிலேறி அனைத்தையும் செய்திடலாம் எனும் நிலை கொண்டிருந்த காரணத்தால் நடந்தே.

இன்றைய இந்திய அரசமைப்பும் அதன் நாடாளுமன்ற, சட்டமன்ற வடிவங்களும் முழுக்க முழுக்க முதலாளியத்திற்கும், ஆரியப் பார்ப்பனியத்திற்கும் ஆனதே.

எனவே, அந்தச் சட்டமன்ற, நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து சில சீர்திருத்தங்களைச் செய்யலாமே அல்லாமல் உரிமைகளை மீட்டெடுக்க இயலாது. மாறாக இருந்த உரிமைகளையும் படிப்படியாக இழந்துவிடுகிறபடியே அமைந்தது, அப்படித்தான் அமையும்.

எனவே, இன்றைய முதலாளிய அமைப்பு முறையை மாற்றி, முழுக்க முழுக்கவான மக்களாட்சி முறை கொண்ட புதிய குடியரசமைப்பை நிறுவியாக வேண்டும். அதிகாரங்கள் முழுமையும் பரவலாக்கப்பட வேண்டும். பன்னாட்டு முதலாளியம் முழுமையாக வெளியேற்றப்பட வேண்டும். கல்வி பன்னாட்டுச் சுரண்டலதிகாரங்களுக்கான கல்வியாகவோ பார்ப்பனிய வைதீகக் கல்வியாகவோ இல்லாமல் முழுக்க முழுக்க மக்கள் வாழ்வியலுக்கான, பண்பாட்டுக்கான மக்கள் கல்வியாக, மக்களின் தாய்மொழிக் கல்வியாக மட்டுமே இருக்க வேண்டும்.

கனிம வளங்களும், கடல் வளங்களும், காட்டு வளங்களும், வேளாண் செல்வங்களும், உழைப்பின் மீத்தங்களும் இந்த மண்ணின் மக்களுக்கானவையாகவே தீர்மானிக்கப்பட வேண்டும். அவற்றைச் சூறையாட வருகிற பன்னாட்டுக் கொள்ளையர்களை விரட்டியடிக்க வேண்டும்.

- இப்படியாகத் தமிழ்த்தேச மக்களுக்குரிய புதிய மக்களாட்சியை நாம் நிறுவுவதுபோலவே, ஒவ்வொரு மொழி மாநிலங்களும் அவையவற்றுக்குரிய மக்களாட்சியை நிறுவுவதற்குரிய உரிமைவழி மாற்றங்களுக்குப் போராடியாக வேண்டும்.

இவையனைத்தையும் இந்திய அளவில் திட்டமிட்டு ஒருங்கிணைத்து ஒரே போராட்டமாக, ஒரே இந்திய மக்களாட்சிப் புரட்சியாகச் செய்ய முடியாது.

வேறுபட்ட மொழி, வாழ்க்கை, குமுக அமைப்பு, அரசியல், பொருளியல் கொண்ட மொழித் தேசங்கள் ஒவ்வொன்றும் அவை அவற்றுக்குமுரிய திட்டங்களைத் தீட்டிப் போராடியாக வேண்டும். உரிமைகளை மீட்டுப் புதியக் குடியரசமைப்பை உருவாக்க வேண்டும்.

அப் போரட்டங்களின்வழி அம் மொழித் தேசங்கள் தங்களுக்குள் உறவு கொள்ளலாம், புதிய ஒன்றியத்தை உருவாக்கலாம்...

இப்படியான திட்டங்கள் ஏற்ற இறக்கமான தன்மையில் ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பேசப் பெற்று வருகின்றன.

ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்த சரியான கட்சிகள் வளரவில்லை. திமுகவாலும் அடைந்தால் திராவிடநாடு, மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என வெவ்வேறு வடிவங்களில் பேசப்பட்டது. ஆனால் இன்றைய முதலாளிய - பார்ப்பனிய இந்திய அரசக் கட்டமைப்புக்குள் திமுக ஒரு மாநில அரசாகப் போய் அமர்ந்து ஏறத்தாழ அறுபதாண்டுகளாகிவிட்டன. எந்த உரிமைகளையும் புதியதாக மீட்டெடுக்கவில்லை என்பது மட்டுமல்ல, இருந்த, இருக்கிற எண்ணற்ற உரிமைகளையும் இழந்துவிட்டதுதான் மிச்சம்.

ஆக, உரிமைகள் மீட்புக்கான வழி வெகு மக்கள் போராட்டமே என்பது உறுதியாகிறது. அப் போராட்டத்தை வழிநடத்திச் செல்ல கட்சியும் இயக்கங்களும் தேவை. முன்னணியாக மக்கள் அணிகளைத் திரட்டி முன்நகர்த்துகிற பெருந்திட்டம் தேவை. அந்தத் திட்டத்தில் சட்டமன்றங்களும், நாடாளுமன்றங்களும் போராட்டக் களங்களாக இருக்கலாமே அல்லாமல் தீர்வுக்கான இடங்களாக இருக்க முடியாது.

இவை ஒருபுறமிருக்க,

கடந்த அறுபதாண்டுகளில் இச் செயற்பாடுகளை முன்னுக்கு நகர்த்தாத பிழைகள் முதலில் புரட்சி இலக்கு நோக்கங் கொண்ட கட்சிகள், இயக்கங்களிடமே இருக்கின்றன.

தி.மு.க.வின் தலைவர்கள் தொடக்கத்தில் இந்த இலக்கைப் பேசினாலும் பிற்காலங்களில் கைநெகிழ்த்துவிட்டு இன்றைய இந்திய அரசமைப்பின் பங்காளிகளாகவே மாறியிருக்கின்றனர். இடையிடையே மாநில உரிமைகளைப் பேசித் தங்கள் கட்சியின் கொள்கை இருப்பைத் தக்க வைத்திருப்பதாகக் காட்டுகின்றனர்.

இந்நிலையில், 2009 - இல் தமிழீழத்தில் நடந்த பேரிழப்பைத் திமுக தடுத்து நிறுத்தவில்லை என்று - புதியதாக வளர்ந்து தமிழ் உரிமை இயக்கங்களும், கட்சிகளும் குறைகூறுகின்றன.

அதற்குக் காரணம் திமுகவின் தலைவர் தமிழரில்லை என்றும், திமுக தமிழ்த்தேசம் பேசவில்லை; திராவிடத் தேசமே பேசுகின்றது என்றும் கூறுகின்றனர்.

அவர் தமிழர் இல்லை என்றதால்தான் தமிழர்க்குரிய ஒரு தேசமான தமிழீழத்திற்காக அவர் போராடவில்லை என்கின்றனர்.

இந்தக் கருத்துகளையே நச்சுக் கருத்து என்றும் அதுவே இருதேச விடுதலைப் போராட்டங்களின் முன்நகர்வுளையும் கெடுக்கின்றன - என்கிறோம்...

**இல்லாத திராவிடத் தேசமும் உருவான தமிழ்த் தேசமும்:**

முதலில் திராவிடத்தேசம் என்றோ திராவிட நாடு என்றோ எவரும் இப்போது கேட்கவில்லை. அப்படி ஒரு தேசத்தை உருவாக்கவும் முடியாது. அப்படி ஒரு திராவிட நாட்டையோ, திராவிடத் தேசத்தையோ திமுக இப்போது கேட்பதாகவும் யாரும் சொல்லவும் முடியாது. 1963 - க்கு முன்பு அவர்கள் அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு என்றனர். ஆனால் 1963 - இலேயே அக்கருத்தைக் கைவிட்டுவிட்டனர். 1967□இல் இந்தியத் தேர்தலில் பங்கெடுத்துப் படிப்படியாக உறவுக்குக் கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம் - என்றனர்.

மற்றபடி - சமசுக்கிருதம் தான் தேவமொழி. சமசுக்கிருதம் ஆரியர்களின் மொழி ஆரியர்கள் அல்லாத பிறர் பேசுகிற மொழிகள் நீச்ச (இழி) மொழிகள். அவையெல்லாம் திராவிட மொழிகள் என்றன ஆரியக் கருத்தாடல்கள்.

எனவேதான், நாங்கள் ஆரியர்கள் இல்லை திராவிடர்கள் என்கிற கருத்தை அயோத்திதாசப் பண்டிதர் தொடங்கி அனைவரும்

அடையாளப் படுத்திப்பதிந்திருக்கின்றனர். ஆக ஆரியத்திற்கு எதிராகத்தான் திராவிடமே அல்லாமல் தமிழரை மட்டுமோ, தெலுங்கரை மட்டுமோ பிற ஆரியல்லாத தமிழியத் தொடர்புடையோர் எவரை மட்டுமோ தனித்துக் குறிப்பிடுவதற்கல்ல.

மேலும் மொழி மாநிலங்கள் பிரிக்கப்படுவதற்கு முன்பு அதாவது 1956□ க்கு முன்பு அது நில அடையாளத்தையும் சேர்த்து குறித்திருந்தது. அப்போதைய அரசு சென்னைத் தலைமாநிலம் (மெட்ராஸ் பிரசிடென்சி) என்பதால் அது சென்னைத் தேசமுமாகிவிடாது..., தமிழ்த் தேசமுமாகிவிடாது.. அதையே திராவிட நாடு - என அப்போது சொல்லி வந்தனர்.

ஆக அதன்பிறகு, தமிழ்த் தேசம் என்பது, தமிழ்நாடு ஒரு மாநில அரசாக உரிமை அடையாளங்களின் சொல்லாக உருக்கொண்டதன் பின் சொல்லப்பட்டது. அதற்கு முன்பாகத் தமிழ்த் தேசம் என்பது அரசியல் சொல்லாக எங்கும் பதிவிடப்படவில்லை.

**தாய்மொழி தமிழல்லாதார்தாம் தமிழீழப் பின்னடைவுக்குக் காரணமா?**

அடுத்து தமிழ்நாட்டில் நீண்டநெடிய காலமாக வாழும், தாய்மொழி தமிழ் அல்லாதார் தமிழ்த் தேசப் போராட்டத்திற்கோ, தமிழீழ ஆதரவுக்கோ ஆகாதவர்களா? அவர்களால்தாம் தமிழ்நாட்டு உரிமைப் போராட்டங்கள் சரிவர நடந்திடவில்லையா? தமிழீழம் வெல்ல முடியவில்லையா?

இப்படியான பார்வையும் நச்சு தனமானதே..

தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டமும், தமிழீழ விடுதலைப் போராட்டமும், சரியான கொள்கைத் திட்டமில்லாத காரணத்தாலும், சரியான நடைமுறை இல்லாத காரணத்தாலும்தான் பின்னடைந்ததே அல்லாமல் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டில்லாதார் தலைமையால்தான் பின்னடைந்தது என்பது நொண்டிக் குதிரைகளுக்குச் சறுக்கியது சாக்காகாதா?

அடுத்து, ஒருவர் தாய்மொழி வழித் தமிழரா இல்லையா என்பதிலிருந்துதான் அவர் தமிழ்த் தேசியரா இல்லையா என்று வரையறை செய்ய இயலுமா? - என்பதை விளங்கிக் கொள்ளவும் விளக்கப்படுத்தவும் வேண்டும்.

**தமிழ்நாட்டுத் தேசியத்தை, தமிழீழத் தேசியத்தைக், கடந்து தமிழை, தமிழினத்தை ஊடுருவிக் கரையான் போல் அரித்துக் கெடுத்து வந்த, கெடுத்து வருகிற ஆரியப் பார்ப்பனிய வைதீக, சமசுக்கிருத, வேத, புராணை, சாத்திர அதிகாரங்கள் எல்லாம் இரு தேசத்திற்குமே பகை என எதிர்க்கப்பட வேண்டும்..**

ஒரு தேசத்திற்கு ஒரு மொழிதான் இருக்க வேண்டும் என்பதும், அந்த மொழி வழி இளந்தினர் மட்டுமே அந்தத் தேசத்தினர் என்பதும் பிழையான அளவீடு.

அப்படி உலகில் ஒரு தேசத்தைக் கூட அளவிட முடியாது. மொழி மட்டுமே ஒருதேசத்தின் அடையாளக் குறியாகிவிடவும் முடியாது. மொழி முதன்மையான கூறுதான். ஆனால் அது மட்டுமே தேசத்தின் அடையாளக் கூறாகிவிட முடியாது.

மொழி, பண்பாடு, அரசியல், பொருளியல், வரலாறு எனப் பல கூறுகள் வழிதாள் தேசமும், அந்தத் தேசிய இனத்தினரும் அடையாளப்பட முடியும். அந்தத் தேசத்தில் அந்தத் தேசத்தின் பொதுமொழியாக, பெரும்பான்மை மொழியாக உள்ளதைத் தாய்மொழியாகக் கொண்டவர் பெரும்பான்மையாக இருப்பதோடு, கடந்த காலங்களில் நடைபெற்ற அரசு, வணிக, போர்கள் காரணங்களால் வந்து குடியேறி, நீண்டகாலமாய் அந்தத் தேசத்தின் உழைப்பு, நுகர்வு, அரசியல், பொருளியல், பண்பாட்டு நிலைகளில் கலந்துவிட்ட சிறுபான்மை மொழியினரும் அந்தத் தேசத்தின் உரிமைப் போராட்டங்களுக்குக் கடமைப்பட்டவர் களாகின்றனர்.

ஒரு பொதுவான மொழி, பண்பாடு, அரசியல், பொருளியல், வரலாற்றியலோடு ஒரு தேசத்தின் உரிமைப் போராட்டங்களை முன்னெடுத்து அந்தத் தேசத்திற்காகப் போராடுகிற அனைவரும் அந்தத் தேசிய இனத்திராகவே கருத முடியும், இருக்க முடியும்.

அப்படியாக, அந்தத் தேசிய இனத்தினராக உணர்ந்து போராடுகிற குலத்தினரின் தாய்மொழி, வீட்டு மொழி இன்னது என்று கூறுபிரித்து அவர்களை ஒதுக்குவது தேசிய இனத்தின் ஒற்றுமையைச் சிதைப்பதிலேயே போய் முடியும்.

ஒரு தேச விடுதலைப் போராட்டத்தில் முழுமையாய்த் தங்களை இணைத்துக் கொண்டு பங்கெடுத்துப் போராடுகிற, அல்லது முழுமையாய் ஆதரவு தெரிவித்துப் போராடுகிற அனைவரையும் அந்தத் தேசிய இனத்திராகவே கருத வேண்டுமேயன்றி, அவர்களை அத் தேசத்தினர் இல்லை என்பது பிழையானதும் நச்சுத் தன்மையானதுமேயாகும். அவர் அந்தத் தேசத்தின் மொழியினத்தினராக இல்லாமல் இருக்கலாம் ஆனால் அந்தத் தேசிய இனத்தினராக இருப்பதை ஏற்க வேண்டும்..

ஆக, இந்தப் புரிதல்களில் இருந்து, இறுதியாகத் தமிழ்நாடு பற்றிய தமிழீழம் பற்றிய செய்திக்கு வருவோம்.

**தமிழீழம் விடுதலைக்கு, உரிமைப் போராட்டங்களுக்குத் தமிழ்நாடு தம்மால் இயலும் வரை உறுதியோடு ஆதரவாக இருக்கும், போராடும்..**

**அதேபோல் தமிழ்நாட்டு விடுதலைக்கும், அதன் உரிமைப் போராட்டங்களுக்கும் தமிழீழம் உறுதியாக ஆதரவாக இருந்து போராட வேண்டும்.**

தமிழீழப் பகை அரசான சிங்கள வெறி அரசை எப்படித் தமிழ்நாடு நட்பரசாக ஆதரவு தேட முடியாதோ, அரசியல் வழி இணக்கப்படுத்திக் கொள்ள முடியாதோ அப்படித் தமிழ்நாட்டின் பகை அரசான இந்திய அரசைத் தமிழீழம் நட்பாகவோ, அரசியல் வழி இணைக்கப்படுத்திக் கொள்ளவோ முடியாது.

இவையன்றித், தமிழ்நாட்டுத் தேசியத்தை, தமிழீழத் தேசியத்தைக், கடந்து தமிழை, தமிழினத்தை ஊடுருவிக் கரையான் போல் அரித்துக் கெடுத்து வந்த, கெடுத்து வருகிற ஆரியப் பார்ப்பனிய வைதீக, சமசுக்கிருத, வேத, புராணை, சாத்திர அதிகாரங்கள் எல்லாம் இரு தேசத்திற்குமே பகை என எதிர்க்கப்பட வேண்டும்..

அம்பானி, அதானி உள்ளிட்ட இந்தியப் பெரும் முதலாளியக்கொள்ளையர்களும், பன்னாட்டு முதலாளியக் கொள்கைளும் இரு தேசங்களுக்குமே பகைமைகளே என்று உணரப்படவும் எதிர்க்கப்படவும் வேண்டும்.

அத்தகைய பகைமைகளையே தங்களின் பகைகளாகவும் ஏற்று இந்தியாவிலும், இலங்கையிலும் பிற அண்டை நாடுகளிலும் போராடும் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் யாவும் நட்புக்குரியவையே என்றும் உணர்தல் வேண்டும்.

இப்படியான தெளிவோடான இரு தேசங்களின் செயற்பாடுகளும்... உறவுகளுமே விடுதலைப் போராட்ட வழியில் நெறியில் இரு தேச விடுதலைப் போராட்டங்களையும் முன்னுக்குக் கொண்டு போகும்..

●

## இணையத்தில் பதிவுகள்..

*மேற்கு வங்கத்தைப் பிரிப்பதற்கு எதிரான தீர்மானத்தை மம்தா அரசு கொண்டுவந்து இருக்கிறது, இந்தத் தீர்மானம் அம்மாநில பாஜக ஆதரவோடு நிறைவேற்ற பட்டிருக்கிறது.. அதுதான் சிறப்பு..*

*வங்காள ஒற்றுமைக்கு எதிராகப் பேசினால் அரசியல் அனாதை ஆகிவிடுவோம் என்ற அச்சத்தை அம்மாநில மக்கள் பாஜகவுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இது தமிழ்நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டிய பாடம்..*

*அதேசமயம் அங்குள்ள பாஜக அரசியல்வாதிகளுக்கும் வங்காள இன உணர்வு கொஞ்சம் இருந்திருக்கிறதோ, தமிழ்நாடு பாஜக ஈன பிறவிகளைப் போல அல்லாமல்.*

*இந்த செய்தியில் திமுக அரசும் மேற்கு வங்கதைப் பின்பற்ற வேண்டும்.. தமிழ்நாட்டுப் பிரிவினை பற்றிப் பேச ஒரு கட்சி அச்சப்படும் வகையில் அரசியல் அளவில் முன்னெடுக்க வேண்டும்.. மக்களை ஒன்றிணைக்க வேண்டும்*

**சௌ. சுந்தரமூர்த்தி, அம்பத்தூர்**

# தமிழ்வழியில் படித்தவர்களுக்கே தமிழ்நாட்டில் வேலை

### மதுரை பாவாணர் மணி மண்டகத்தில் தமிழ்வழிக் கல்வி உரிமை மாநாடு



தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் 33 ஆவது ஆண்டு எட்டாம் மாநாடு பேரணி, தமிழ்வழிக் கல்வி உரிமை மாநாடு மதுரை பாவாணர் மணி மண்டகத்தில் தி.பி.2055 ஆடவை 30 (14.07.2024 ஞாயிறு 10 மணி முதல் இரவு 7 மணிவரை நடைபெற்றது.

மதுரை அண்ணா பேருந்து நிலையம் முன்புறம் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு 10மணிக்கு மாலை அணிவித்து உறுதியேற்று முழக்கத்துடன் பதாகை கொடி முழக்க அட்டையுடன் இரு வரிசையாகப் பேரணி புறப்பட்டு கொள்கை முழக்கத்துடன் மாநாட்டு அரங்கம் 11 மணிக்கு சென்றடைந்து.

தமிழிசைப்பாடல் பாவலர் வைகை பிரபா கலைக்குழுவுடன் பாவலர் நா.காமராசன் ஆசிரியர் சௌந்தரராசன் தென்மொழி ஈகவரசன் பாடினர் அரங்கத்திற்குள் உள்ள பாவாணர் சிலைக்கு மாலை அணிவித்து முழக்கத்துடன் ஈகியர்களுக்கு வீரவணக்கப் பாடலுடன் முதல் அமர்வுத் தொடங்கவுரை முனைவர் ம.சுசிலா உதவி இயக்குநர் தமிழ்வளர்ச்சித் துறை மதுரை. முன்னிலை வகித்தோர் தோழர் செந்தமிழ்வேந்தன் ஆசிரியர் வீ.இரத்தினம் தோழர் தமிழ்முருகன் தாய்த் தமிழ் இராசா தோழர் வெற்றிவேல் ஆசிரியர் தாயகம் தமிழரசன் தோழர் ஆவடி நாகராசன் தோழர் சுசீத் வழக்குரைஞர் திலீபன் இராசா மெய்ச்சுடர் ந.வெங்கடேசன் தோழர் செல்வமணியன் தங்கச்சாமி மகள்.

தோழர் வழக்குரைஞர் கு.ஞா.பகவத்சிங் தலைமையுரை தோழர் சு.குரு.தொல்காப்பியன் வரவேற்புரை முழக்கவுரை தோழர் இரா.எழுகதிர் தோழர் நெ.பாண்டித்துரை தோழர் காஞ்சி அமுதன் பேராசிரியர் ம.சிவராமன் பேராசிரியர் இரா.முரளி வழக்குரைஞர் ப.செந்தில் கரிகாலன் பேராசிரியர் கோச்சடை நிறைவுரை பேராசிரியர் பிரபா கல்விமணி.

திருக்குறள் தமிழ்நாள்காட்டி மாநாட்டுத் துணிப்பை வெளியீடு அரசு பள்ளியில் தமிழ்வழியில் படித்த 21மாணவர்களுக்கு பாராட்டும் சான்றும் வழங்கப்பட்டது. நடனம் பேராசிரியர் செயராசு பாடல் முனைவர் சாந்தகுமார்

இரண்டாவது அமர்வு முன்னிலை பேராசிரியர் அ.தமிழ்க்குமறன் நல்லாசிரியர் சி.வாசு தோழர் நடத்துநர் ந.இரெத்தினம் பெரியார் பற்றாளர் பி.வரதராசன் தமிழ்மருத்துவர் நெடுஞ்செழியன் பாவலர் ஆ.இராமர் தோழர் ச.மெய்யப்பன் தோழர் காமாச்சி தோழர் முருகானந்தம் கல்வி முற்றுரிமையையும் மாநிலத்திற்கே தலைமையுரை தோழர் அ.சி.சின்னப்பத்தமிழர் வரவேற்புரை பாவலர் வை.தேனரசன் தோழர் தமிழ்ப்பித்தன் தோழர் பரிதி தோழர் சௌ.சுந்தரமூர்த்தி தோழர் மேரி பாவலர் செ.வ.மதிவாணன் வழக்குரைஞர் பெ.சரவணன் பாவலர் சு.சண்முகசுந்தரம் வழக்குரைஞர் அரங்க முருகராசு புலவர் ம.சுப்பராயன் தோழர் குமரன் தோழர் ச.மீ.இராசகுமார் நிறைவுரை தோழர் பொழிலன் தீர்மானம் படித்தல் புலவர் இர அரங்கநாடன் நன்றியுரை தோழர் த.மணிசேகரன்



# பொதுவுடைமை இயக்க மூத்தத் தோழர் இரா. கோவிந்தசாமிக்கு வீரவணக்கம்



கீழத்தஞ்சை மாவட்டத்தில் பொதுவுடைமை இயக்கம் உழவுத் தொழிலாளிகளின் உரிமைக்கான இயக்கமாக வீறுகொண்டு எழுந்த போது இன்றைய நாகை மாட்டத்தில் தீத்தாம்பேட்டையில் தோழர் இரா. கோவிந்தசாமி பிறந்தவர். தொடக்கல்வி கற்றுப் பஞ்சாயத்து அலுவலகத்தில் உதவியாளர்பணியில் சேர்ந்தார்.

மார்க்சிய இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட காரணத்தால் அரசுப்பணி யிலிருந்து விடுபட்டு இந்தியப் பொதுவுடைமைக்கட்சியில் தன்னை இணைத்து கொண்டார். 1964 ஆம் ஆண்டு கட்சி பிரிந்தபோது சிபிஎம் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றினார்.

தேசிய இன உரிமை - ஈழச்சிக்கல் - இட ஒதுக்கீடு - தேர்தல் நிலைப்பாடு - பகுதி புரட்சி உள்ளிட்ட கொள்கை சிக்கலில் அக்கட்சியின் நிலைபாடுகளை எதிர்த்து இந்திய மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி 1985 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டபோது அதில் இணைந்து த.தே.பொ.க அமைப்பின் தலைமைக்குழுவரை இணைந்து செயல்பட்டார்.

மக்களைத் திரட்டி அவர்களின் உரிமைகளுக்காகப் பல போராட்டங்களை நடத்தியவர். 1992 ஆம் ஆண்டு காவிரி உரிமை தமிழ்வழிக் கல்வி உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தோழர் இராசோ தலைமையில் செங்கிப்பட்டியில் போராட்டம் நடத்தி திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். 12 ஆண்டுகள் நடைபெற்ற அவ்வழக்கில் விடுவிக்கப்பட்டார். 1995 தஞ்சையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் தமிழ் உரிமைக்காக்கப் பாவலரேறு தலைமையில் நடைபெற்ற போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறையேகியுள்ளார்.

1997 ஆம் ஆண்டு திருத்துறைப்பூண்டியில் தீண்டாமை ஒழிப்பு தமிழர் ஒற்றுமை மாநாடு நடத்த முதன்மை ஆற்றலாக விளங்கியவர். தான் சாதி மறுப்பு திருமனம் செய்து கொண்டதோடல்லாமல் தனது பிள்ளைகளுக்கும் சாதி மறுப்புத் திருமணங்களைச் செய்துவைத்தவர்.

காலமெல்லாம் மார்க்சியம் வெல்ல எளிய வாழ்வு வாழ்ந்து மறைந்த தமிழ்நாடு பொதுவுடைமை இயக்கத் தமிழ்த்தேசம் மார்க்சிய வழியில் தன்னுரிமை பெற்ற சோசலிச குடியரசு அமைக்கத் தனது இறுதி மூச்சுவரை செயல்பட்டவர் தோழர் இரா.கோவிந்தசாமி அவர்கள்.

தோழர் இரா. கோவிந்தசாமி அவர்களுக்கு செவ்வணக்கம் செலுத்துவோம்.

**- காஞ்சி அமுதன்**

# தமிழ்நாட்டுக்கு 0 ரூபாய் பட்ஜெட் பாஜக அரசைக் கண்டித்துக் கூட்டம்

கடந்த ஆகத்து 7 அன்று பிற்பகல் தமிழ்நாட்டுக்கு 0 ரூபாய் பட்ஜெட் ஒன்றிய பாஜக அரசை கண்டித்துச் சென்னை நிருபர்கள் சங்கத்தில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் மக்கள் தமிழகம் கட்சி சார்பாகத் தோழர் செவ்வேள் பங்கு பெற்று கண்டன உரையாற்றினார்

தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டுக் கொடுத்தால் மட்டும் தமிழகத்திற்கான கல்வித்தொகை ஒதுக்க முடியும் என்று சொன்ன மத்திய அமைச்சரைக் கண்டித்தும், சென்னை இரண்டாம் கட்ட மெட்ரோ பணிகளுக்கு நிதி கொடுக்காத ஒன்றிய ஒன்றிய அரசைக் கண்டித்தும், ஏழை எளிய மக்கள் செய்யும் காப்பீடு திட்டங்களுக்கு 18% வரி விதிப்பதைக் கண்டித்தும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 40% சதவீத வரியை 35% குறைத்ததைக் கண்டித்தும் கண்டன உரையாற்றினார்.

# வினேஷ் போகத்தைத் தோல்வியுறச் செய்தது 100 கிராமா? இந்திய பாசிச ஆட்சியாளர்களா?

பெண்களுக்கு எதிராக நேரும் வன்கொடுமைகளைக் கண்டிப்பவர்கள் அனைவரும் சில கூட்டங்களுக்கு எதிரியே!

கடந்த ஆண்டு பாலியல் புகாரில், பாஜக வைச் சார்ந்த இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் பிரிஜ் பூஜன் சிங்கை கைது செய்யக்கோரி, இந்தியாவிற்காகப் பதக்கங்களை வென்ற மல்யுத்த வீரர்கள், வீராங்கனைகள் போராடினார்கள். அவர்களுள் ஒருவர் தான் வினேஷ் போகத்.

பிரான்சின் தலைநகர் பாரிசில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2024 ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான மல்யுத்தத்தில், 50 கிலோ எடைப்பிரிவில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்த இந்தியாவின் வினேஷ் போகத் 100 கிராம் எடை அதிகமாக இருப்பதாகச் சொல்லி தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.


இந்தத் தகுதி நீக்கம் குறித்து நாடாளுமன்றம், பல அரசியல் கட்சித் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என அனைவராலும் பல யூகங்களும், கேள்விகளும் எழுப்பப்பட்டு வரும் நிலையில், இதற்கெல்லாம் முன்பே பதில் சொல்லும் வகையில் வினேஷ் போகத் ஏப்ரல் 12, 2024 அன்று ஒரு குறுஞ்செய்தியைப் பதிவிட்டு இருந்தார். அதில், "ஒலிம்பிக் தகுதிப்போட்டி ஏப்ரல் 19 நடைபெற இருக்கும் நிலையில் தனது பயிற்சியாளர் மற்றும் உடற்பயிற்சி சிகிச்சை அளிப்பவருக்கும் அங்கீகாரம் வழங்க ஒரு மாதமாக அரசாங்கத்திற்குக் கோரிக்கை விடுத்தும் தனக்கு தகுந்த பதில் கொடுக்கக் கூட இந்திய அரசு தயாராக இல்லை எனவும், பிரிஜ் பூஜன் மற்றும் சஞ்சய் சிங், தான் ஒலிம்பிக்கில் பங்கேற்காதவாறு செய்வதற்கு எல்லாவகை முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர், மற்றும் ஒலிம்பிக் பயிற்சியாளர்கள் அனைவரும் பிரிஜ் பூஜனின் ஆதரவாளர்கள். ஒருவேளை அவர்கள் தண்ணீரில் ஏதேனும் கலந்து கொடுத்து என்னைத் தோல்வியடையச் செய்தாலும் ஆச்சரியம் இல்லை" என்ற ஐயத்தை அன்றே வினேஷ் போகத் போட்டிக்கு முன்பே எழுப்பி இருந்தார்.

ஒலிம்பிக்கில் பங்கேற்க இருக்கும் போட்டியாளருக்குப் போட்டிக்கு முன்பு உள்ள ஏழு நாட்களில் பயிற்சியாளர் மற்றும் உடற்பயிற்சி சிகிச்சையாளரின் உதவி இன்றியமையாதது. அவர்களுக்கு அரசு அனுமதி வழங்கப்பட்டால் மட்டுமே போட்டியாளரால் தக்க பயிற்சிகளைப் பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பை உலக மல்யுத்த கூட்டமைப்பே தடை செய்து வைத்துள்ளது. அன்று பிரிஜ் பூஜன் என்னும் ஒற்றை நபரைக் காப்பாற்ற, பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராகப் போராடிய இந்திய வீரர்கள், வீராங்கனைகளை மோடி அரசு "தேச விரோதிகள்" என்று கூறியதோடு மட்டுமின்றி எல்லைப் பாதுகாப்புப் படையைக் கொண்டு அடித்து இழுத்து சாலையில் வீசியதை உலகமே அறியும்.

குற்றம் சுமத்தப்பட்டவரின் மகன் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதும், தவறினைத் தட்டிக் கேட்பவர் தகுதி நீக்கம் செய்யப்படுவதும் ஒரே அரசின் கீழ் தான் என்பதை நாமும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அரை இறுதிக்குப் பிறகான 12 மணி நேரம் என்ன நடந்தது? இறுதிப் போட்டிக்குத் தயாராக எடையை பரிசோதித்த போது தான் 52.7 கிலோவாக அவரது எடை அதிகரித்து இருந்தது. பலுத்தூக்குதல், ஸ்கிப்பிங்(தாவுதல்), சைக்கிளிங்(மிதிவண்டி ஓட்டுதல்) போன்ற எடைக் குறைப்புப் பயிற்சிகளை மேற்கொண்ட வினேஷ், உணவு உட்கொள்ளவில்லை; ஒரு சொட்டுத் தண்ணீர் கூட குடிக்கவில்லை; ஒரு நொடி கூட உறங்கவில்லை. இறுதிக் கட்டமாக அதிகாலையில்



நீராவிக் குளியல் போன்ற மருத்துவ முறையிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இனி வியர்வையே வராது என்ற கட்டத்தில் தலை முடியை வெட்டுவது, உடலில் இருந்து சிறு அளவு இரத்தத்தை வெளியேற்றுவது என எடைக் குறைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தன. இத்தனைக்கும் பிறகு வினேஷின் எடை 50.1 ஆகக் குறைந்தது. 100 கிராம் வினையாகி அவர் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை இழந்ததோடு தரவரிசையின் கடைசி இடத்திற்கு தள்ளப்பட்டார். அவரது தகுதி இழப்பில் எந்த மாற்றமும் செய்ய முடியாது என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி சொல்லிவிட்டது.

பாரிசில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகளாவிய ஒலிம்பிக் அமைப்பின் 142-வது அமர்வில், இந்தியாவிலிருந்து சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் இந்திய உறுப்பினராக ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டவர் ரிலையன்ஸ் அறக்கட்டளையின் நிறுவனர் நீத்தா அம்பானி. எட்டு ஆண்டுகளாகச் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் உறுப்பினராக இருந்து வரும் இவர் வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டது குறித்துக் குரல் கொடுக்காமல் இருந்தது ஏன்? இவருக்கும் பாஜக விற்குமான தொடர்பு என்ன?

இந்தத் தகுதி நீக்கம் இந்தியாவிற்கு யாரோ செய்த சதி என்று ஒரு தரப்பினர் பேசினாலும், இந்தியாவிற்குள்ளேயே வினேஷ் பதக்கம் வெல்வதில் விருப்பம் இல்லாத அரசியல்வாதிகளின் நாடகமாகக் கூட அல்லது பழிவாங்கலாகக் கூட இருக்கக்கூடும் என்பதை மேற்கூறிய நிகழ்வுகளின் வரிசை நம்மை எண்ண வைக்கிறது.


இவ்வளவு நடந்தும் பெண்களுக்கு, தான் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்று இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி தகுதிச்சுற்று, காலிறுதி மற்றும் அரையிறுதிச் சுற்றுகளை ஒரே நாளில் வென்ற வினேஷ் போகத் இந்தியாவிற்குக் கிடைத்த தங்கம். இதை நாம் அனைவரும் வழிமொழிந்தே ஆக வேண்டும்.

இறுதிச்சுற்றுக்குத் தேர்ச்சி பெற்று, வெள்ளி அல்லது தங்கப்பதக்கம் உறுதியான நிலையில் அதாவது உலகமே பார்க்கவிருக்கும் மேடையில் வினேஜன் வெற்றி உரை உறுதி என்ற செய்தி யாரைப் அச்சுறுத்தியதோ !

இன்று வினேஷின் வெற்றிக்குரலை அவர்கள் தடுத்திருக்கலாம். இது போன்ற குரல்கள் தடுக்கப்பட்டுக் கொண்டே இருந்தாலும், இந்திய ஒன்றியத்தில் நடக்கும் அநீதிகளை எதிர்த்து எங்கேனும் ஏதாவது ஒரு குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும். இது தவிர்க்க முடியாதது; யாராலும் தடுத்து நிறுத்த முடியாதது.


தன்னைத் தாக்க வரும் எதிரிகளை எதிர்த்து விரட்டி அடிக்கும் தேனீக்களைப் போல, இந்நாட்டில் நடைபெறும் அநீதிகளை, மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்கு இளைஞர்கள், மக்கள் திரள் ஒன்றுபட வேண்டும். உரிமைகளுக்காகக் களமாடிக் கைகோர்க்க வேண்டும்.

# பார்வைக்கு வந்த சில நூல்கள்..



**திருக்குறள் - நாவலர் உரை**
உரு.100/ மலிவு விலையில்
ஆசிரியர் :
**நாவலர் இரா. நெடுஞ்செழியன்**
செந்தமிழ் எழுச்சி பதிப்பகம்
பெரம்பலூர் - 621 212
தொலைபேசி: 9884662512.

**குருமூர்த்தி: ஆர். எஸ். எஸ்ஸின் நிழல் அதிகாரம்.**
விலை உரு.150
ஆசிரியர் :
**சுஜாதா சிவஞானம்**
தமிழில்
**பேரா. சே. கோச்சடை**
வெளியீடு:
தமிழ்ப்புலம்
110, கணேசபுரம்,
தத்தனேரி
முதன்மைச்சாலை,
மதுரை 625 018.
தொலைபேசி: 77082 80309, 84281 08721




இந்த நூல் குருமூர்த்தி என்ற தனிநபரைப் பற்றியதல்ல... பார்ப்பனிய சமூக மேலாதிக்கத்தை அரசதிகாரமாக நிலைநிறுத்த இயங்கும் 'ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைமையகமான நாக்பூருடன், தமிழ்நாட்டைச் சேர்ந்த பாணாம்பட்டின் அக்ரஹாரமொன்று இணைந்ததைப் பற்றியதானது.




**மானுடம் சான்றோர்க்கு அணி.**
விலை உரு.200
ஆசிரியர் :
**தங்க. செங்கதிர்**
தொடர்புக்கு:
மானுடம், 11,10, 4சி,
பழனிச்சாமி
காம்பவுண்ட்,
இமையம் நகர்,
எஸ். ஆலங்குளம்,
மதுரை 14.
அலைபேசி:
90035 98674

**ஜாத்-பட்-தோடக் மண்டல அறிக்கை புரட்சியாளர் அம்பேத்கர்.**
வெளியீடு:
உயிர் பதிப்பகம்,
4, சக்தி கணபதி நகர்,
5வதுதெரு,
திருவொற்றியூர்,
சென்னை 600019
பேசி: 9840364783.



**பாடாண் திணை**
விலை உரு.60
ஆசிரியர் :
**த. ரெ. தமிழ்மணி**
வெளியீடு:
பாவாணர் பதிப்பகம்,
வேலங்குடி,
கீழப்படுகை,
திருவாரூர்610 109,
தொலைபேசி:
9842011344





**மோடி ஆட்சி இருண்ட காலத்தின் சாட்சி.**
விலை உரு.225/
ஆசிரியர் :
**வன்னி அரசு**
வெளியீடு:
நக்கீரன்
105, ஜானி ஜான்கான் சாலை
இராயப்பேட்டை
சென்னை 14
தொடர்புக்கு: 044 43993000


பொய்களை வைத்தே புனையப்பட்டிருக்கிறது சனாதனக் கருத்தியல். அதை நிலை நிறுத்துவதற்காக ஆட்சி பீடத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார் நரேந்திர மோடி. எனவே, அவரும் பொய்களையே வாக்குறுதிகளாக வழங்கி மக்களை ஏமாற்றுகிறார். நரேந்திர மோடி தெளிக்கும் பொய்களை உண்மைகள் என நம்பச் செய்வதற்காக ஊடகங்கள் யாவும் களமிறக்கப்பட்டுள்ளன. சமூக ஊடகங்களும் மோடி அரசால் கண்காணிக்கப்படுகிறது. அதன் கூலிப் படையால் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்தச் சூழலில் மோடி அரசின் பொய்களுக்குப் பின்னே ஒளிந்திருக்கும் அதன் அதிகாரத்துவ கோர முகத்தை மக்களுக்கு அம்பலப்படுத்த வேண்டிய கடமை சனநாயக சக்திகளுக்கு உள்ளது. அதை உணர்ந்து தோழர் வன்னி அரசு அவர்களால் எழுதப்பட்டிருக்கிறது இந்நூல்.

**உச்சநீதிமன்ற தீர்ப்பும் வரலாற்று உண்மைகளும்.**
விலை உரு.150
ஆசிரியர் :
**சுடரி**
பேசி:
9444713580




**யாருமே தடுக்கல**
**(சாதி ஆணவக் கொலை ஆய்வு அறிக்கைகள்.)**
விலை உரு. 250
ஆசிரியர் :
**வ. இரமணி**
வெளியீடு:
சிந்தன் புக்ஸ் 327/1
திவான் சாகிப்
தோட்டம்
டி.டி.கே.சாலை,
இராயப்பேட்டை
சென்னை 600 014
தொலைபேசி
044 28114164.





**பாவாணர் பிள்ளைத் தமிழ்.**
விலை உரு.100
ஆசிரியர் :
**வாய்மை இளஞ்சேரன்**
வெளியீடு: வாய்மைப் பதிப்பகம்,
முதன்மைச் சாலை,
பாலையூர் - அஞ்சல்,
குத்தாலம் வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம்.
612203.
தொலைபேசி:
83000 49060,
97917 89003

**நானும் நாற்புறமும்.**
விலை உரு.240
ஆசிரியர் :
மகுடேசுவரன்
தமிழினி,
63, நாச்சியம்மை நகர்.
சேலவாயல்,
சென்னை 51.
தொலைபேசி:
8667255103.



**நூல்கள் அறிமுகப் பகுதிப் பதிவுக்கு இரண்டு நூல்கள் அனுப்பவும்**

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005

# தமிழ் ஆழம் அறிவோம்

## நாவலந் தீவு

சொல்லாய்வு அறிஞர் அருளியார்

நாவல் மரங்கள் மிகுவாகச் செழித்து அடர்ந்திருந்த பொழிலாகப் பண்டைய இந்தியா இருந்தமையின் -அக்கால் இது “நாவலந்தீவு” என்னப் பெற்றது.

"நாவலந் தீவே.... ...... எனத் தீவேழே
ஏழ்பெருந் தீவும் ஏழ்பொழி லெனப்படும்" (திவாகரம்)

1. பனிமலையும் வட இந்தியாவும் இல்லாத முந்தைய பகுதி
2. பனிமலையோடு கூடிய இந்தியாவும் பழம்பாண்டி நாடும் இருந்த ஒட்டுமொத்தப் பகுதி
3. பழம் பாண்டி நாடு இல்லாத இந்தியா என முந்நிலைகளைக் கொண்டது “நாவலந்தீவு” இல்லாத இந்தியா என அவர்கள். (காண்க: பாவாணரின் தமிழ் வரலாறு: பக்: 3)

நாவலந்தீவு : நாவலந்தீ வாள்வாரே நன்கு" (ஏலாதி. 56)

நாவலந்(தீவு + அம்) > தீவம் = நாவலந்தீவு

"நாவலந் தீவம் போற்றி" (திருவாலவா. கடவு:8)

நாவல் + அகலிடம் > நாவல்கலிடம் = நாவலந்தீவு

"நாவலகலிடத்து ஞாயிறனையாய்" [பு.வெ:8:17]

நாவல் + பொழில் > நாவற்பொழில் = நாவலந்தீவு “பூமலி நாவற் பொழிலகத்து” [பு.வெ:9:38]

நாவல் + அம் + தண் + பொழில் நாவலந் தண்பொழில் = நாவலந்தீவு

"நாவலந் தண்பொழில் வீவு இன்று விளங்க" (பெரும்: 465)

[நச்சினார்க்கினியர் உரை: நாவலாற் பெயர்பெற்ற அழகினையுடைய குளிர்ந்த உலகமெல்லாம் கேடின்றாக விளங்கும்படி ...]

" நாவலந் தண்பொழில் மன்னர்" (சிலம்பு: 17:1 -3)
(உரை: நாவலந் தீவிலுள்ள ஏனைய அரசர்களும்...)

நாவல் மரங்களின் செறிவிடம் என்னும் பொருட்காரணமாகவே "நாவலந்தீவு" என்னும் பெயர் சூட்டப் பெற்றது என்பதை -"நாவல் தழீஇய நானிலம் "[திருக்கோ: 19] நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து" [மணி: 11:107],"
நாவல் ஓங்கிய மாபெருந் தீவத்து" [மணி: 2:1] என்றவாறு பல்வேறு குறிப்புகள் மெய்ப்பிக்கின்றன.

'யா" என்னும் கருமைக்கருத்து மூலவழியே [யா>யா+அம்> யாம் > யாம்+பு >யாம்பு>] சாம்பு என்றவாறு நாவல்மரத்தைக்குறித்துத் தமிழ் மக்களின் வழக் சொல்லைத் தம் வேதமொழிக்கும். Jambu" என்ற ஒலிப்பமைப்பில் திரித்துப் பதித்துக் கொண்டனர்.

யா > யாஅம் > யாம் > யாம்+பு > யாம்பு > சாம்பு

சம்பு+அல்> சாம்பல் = எரிபட்டுக் கரிதாகிய நீறு

சுடுகாடான சாம்பல் அரங்கத்திலே" (புறப்பொருள் வெ: 9:43: உரை]

சாம்பல் >சாம்பர் [லகர ரகரத் திரிபு]

(ஒ.நோ: குடல் > குடர்
பந்தல் > பந்தர்

சாம்பர் = சாம்பல்

"சாம்பர் அகலத்து அணிந்தாய் போற்றி" [தேவா: 967:4]

யாம்பு > சாம்பு = கரிய கனிகளையுடையதாகிய நாவல்மரம்

சாம்பு =நாவல் [தைலவருக்கச் சுருக்கம்)

மேலுங்காண்க: சாம்பு + அல்>சாம்பல் = நாவல் (மலையகராதி)

சாம்பு> (சம்பு) (skt) jambu

[நாவலைக் குறித்த] "சாம்பு" என்பதன் சமற்கிருதத் திரிபான Jambu " என்னும் சொற்கொண்டு -நாவலந்தீவை "Jambu-dvipa என்றவாறும் குறிக்கலாயினர்!

[ தீர்வு > தீவு > (skt) dvipa]

- யா நூலிலிருந்து..

## தோழர்களுக்கு வீரவணக்கங்கள்..

திருச்செந்தூர் வட்டத்தில் உள்ள நாலுமூலைக்கிணறு சிற்றூரைச் சார்ந்த தோழர் பட்டுராசா. தோழர் பால். சித்திரை ராசன் இருவரும் மறைவுக்கு..
ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்..


தோழர் பட்டுராசா

தோழர்களின் குடும்பத்தார் மற்றும் உடன் தோழர்கள் ஆறுதல் அடைய வேண்டுகிறோம்..

தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் தொடங்கிய சில காலங்களிலேயே அமைப்பில் உறுப்பினர்களாகித் தீவிரச் செயல்பாடுகளில் ஈடுபட்ட தோழர்களே பட்டுராசாவும், சித்திரை ராசனும்.. 1994 ஆம் ஆண்டு சங்கரமட இடிப்புப் போராட்டத்தைத் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் முன்னெடுத்து நடத்திய போது போராட்டத்தில் பங்கெடுத்துச் சிறைப்பட்ட தோழர்கள் அவர்கள்..
தோழர் பாண்டியன் (வழக்கறிஞர் வெற்றி) அங்கு முழு நேரத் தோழராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த போது அவரின் அரசியல் பயிற்சியில் சிறந்த அரசியல் தோழர்களாக வளர்ந்திருந்தார்கள்..


தோழர் பால். சித்திரை ராசா

தொடர்ந்து த ஒ வி இயக்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும் தொய்வில்லாமல் ஈடுபட்டு வந்தனர்..
சாதி ஒழிப்பு அரசியலிலும் தமிழ்த் தேச விடுதலை அரசியலிலும் ஆழ்ந்த அறிதல் உள்ள தோழர், கடந்த சில ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டிருந்த போதும் இடைவிடாது தம்மால் இயன்ற அளவு ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்..

அவர்களின் இழப்பு ஈடு செய்ய இயலாத இழப்பு..

அவர்களுடைய குடும்பத்தார் மற்றும் தோழர்கள் ஆறுதல் அடைய வேண்டும்..

தோழர்களுக்கு வீரவணக்கங்கள்..

# இன்று வயநாடு, நாளை காவிரிப்படுகை
## என்ன செய்யப் போகிறோம்?

பேராசிரியர் **த.செயராமன்,**
தலைமை ஒருங்கிணைப்பாளர், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு;
நெறியாளர், தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்.

### வயநாட்டில் நிகழ்ந்த பெருந்துயர்

இந்திய துணைக் கண்டம் மட்டுமின்றி, உலகத்தினரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது வயநாடு நிலச்சரிவுப் பேரழிவு. வயநாடு மாவட்டம், கேரளாவின் வடகிழக்குப் பகுதியில், கோழிக்கோடு, கண்ணூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து நிலப்பகுதிகள் பிரித்தெடுக்கப்பட்டு, 1980-ஆம் ஆண்டு கேரளாவின் 12-ஆவது மாவட்டமாக உருவாக்கப்பட்டது. இயற்கை எழில் நிரம்பிய வளமான மாவட்டம் இது. கடந்த சூலை 30 ஆம் நாள் நள்ளிரவு 1.30 மணிஅளவில் பேரழிவை அம் மாவட்டத்து மக்களுக்குத் தந்த நிலச்சரிவு நிகழ்ந்தது. அதே நாள் விடியற்காலை 4.00 மணிக்கு மீண்டும் ஒரு நிலச்சரிவு நிகழ்ந்தது. இந்நிலச்சரிவுக்கு முன் சூலை 28 - 29 ஆகிய நாள்களில் 572 மில்லி மீட்டர் அளவிற்கு பேய்மழை பொழிந்திருந்தது. 2024 சூலை மாதத்தில் மட்டும் 2093.6 மி.மீ மழையைப் பெற்று வயநாடு மண் ஊறி, தளர்வாகியிருந்தது. கடும் வெள்ளப்பெருக்கால் தளர்ச்சி யுற்றிருந்த மண் சரியத் தொடங்கியது. பாறைகளும் சரிந்து உருண்டன. முண்டக்கை, சூரல் மலை, மேப்பாடி, வைத்திரி, வெள்ளேரிமலை, பொத்துகலு ஆகியவை பெரும் பாதிப்புக்கு உள்ளாகின. முண்டகையில் புஞ்சிரிமட்டம் என்ற இடம் காணாமலே போனது.

நிலச்சரிவு நடந்து ஏழு நாட்களாக இறந்தவர்களைத் தோண்டி எடுக்கும் பணி தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. 405 பேருக்குக் குறையாமல் பலியாகி இருக்கிறார்கள் என்றும், 200 பேர் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை என்றும், 183 உடல் உறுப்புகள் கிடைத்து இருக்கின்றன என்றும், மீட்புப் பணிகள் தொடர்கின்றன, நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் கேரள அரசு அறிவித்தது. அடையாளம் காணவே முடியாத உடல்கள் ஆங்காங்கே புதைந்து கிடக்கின்றன. சில இடங்கள் இருந்த இடம் தெரியாதபடி மண்ணால் மூடப்பட்டு விட்டன. ஹெலிகாப்டர்களும், மோப்ப நாய்களும் உயிரோடு எஞ்சி இருக்கும்



மனிதர்களையும், இறந்து மண்ணால் மூடப்பட்ட உடல்களையும் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சூரல்மலையில் இருவழிஞ்சி ஆறு திசை மாறி அப்பகுதியின் வாழ்விடங்களையே அழித்துவிட்டது. பல பகுதிகள் மொத்தமாக மண்ணில் புதைந்து விட்டன. தோண்டிப் பார்க்க முடியாத அளவிற்கு மிக ஆழமான பகுதிக்கு மக்களையும் கட்டிடங்களையும் தள்ளி ஒட்டுமொத்தமாக மண்ணால் மூடிவிட்டது. ஆறு பெருக்கெடுத்து கிராமத்தை அழிக்கத் தொடங்கிய நிலையில் அதை உடனடியாகத் தெரிவித்த ஒரு மருத்துவக் கல்லூரியின் செயல் அதிகாரி நீத்து என்ற பெண்ணும் மண்ணுக்குள் புதைந்து போனார். கேரளத்து மக்கள் மட்டுமின்றி பல்வேறு வடமாநிலத்தவர்களும், 25 தமிழர்களும் மண்ணில் புதைந்திருக்கிறார்கள். குழந்தைகள் அனாதைகளாக நிற்கின்றன. ஒரு தொண்டுநிறுவனம் அனாதை தத்தெடுப்பை கையெடுத்துள்ளது. தங்களின் வாழ்நாள் உழைப்பாக உழைக்கும் மக்கள் கட்டியிருந்த வீடுகள் இருந்த தடம் இல்லாமல் ஒரே இரவில் மறைந்து விட்டன. தங்கச்சன் என்ற உழைப்பாளி இப்படிக் கூறுகிறார்: "இனி எதுவும் இல்லை; ஆறு மட்டுமே ஓடுகிறது."

### இவ்வளவு பெரிய பேரழிவுக்கு என்ன காரணம்?

வயநாடு மாவட்டத்தின் புவி அமைப்பும், இயற்கை அமைப்பும் இத்தகைய அழிவுகளுக்கு இடம் தரத்தக்கதாகவே இருக்கிறது. ஆனால், இந்தப் பேரழிவுகளுக்குக் காரணம் காடுகள் பெருவாரியாக அழிக்கப்பட்டதும், மலைகள் உடைக்கப்பட்டதும், ஒரே வகையான பயிராகத் தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டதும் முக்கியமான காரணங்கள். சுற்றுலா செல்லும் விருந்தினர்களுக்குப் பயன் தரும் வகையில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மலைகள் பல இடங்களில் வெடிவைத்து தகர்க்கப்பட்டுள்ளன. புதிய கட்டுமானங்கள் தோன்றியுள்ளன. பாறைகளையும், மண்ணையும் அகற்றித் தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இயற்கையோடு இணைந்து வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் மலைப்பகுதி மக்கள் . இப்போது வசதியான வாழ்வு என்ற நோக்கோடு இயற்கையை அழித்து வாழ்வதை வரவேற்பதும், வளர்ச்சி என்ற பெயரில் இயற்கையை அரசு அழித்து வருவதும் இப்பேரிடரைக் கொண்டு வந்திருக்கிறது. இயற்கை வயநாட்டில் திருப்பி அடித்திருக்கிறது. 'மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம் ' என்ற நூலில் மார்க்சிய மூலவர்களில் ஒருவரான பிரடெரிக் ஏங்கல்ஸ் இவ்வாறு பதிவு செய்கிறார்:

" மனிதனைத் தவிர மற்ற விலங்குகள் இயற்கையைத் தனது சுற்றுச் சார்புக்காக மட்டுமே பயன்படுத்துகின்றன. ஆனால் மனிதன் மட்டுமே தனது தேவைக்கு ஏற்றவாறு இயற்கையை மாற்றி அமைக்க முயற்சிக்கிறான். மனிதன் இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தி அதை மாற்றி அமைக்க முயற்சிக்கும் போது, மனிதனை இயற்கை திருப்பி அடிக்கிறது.

### மாதவ் காட்கில் குழு அறிக்கை - 2011

தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு இணையாக செல்லும் மேற்குத் தொடர்ச்சி மலை கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் வழியாக 1,600 கிமீ நீளத்தையும், சுமார் 1,40,000 ச.கி.மீ பரப்பளவையும் கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் பாயும் அத்தனை ஆறுகளும் மேற்கு தொடர்ச்சி மலையிலேயே பிறக்கின்றன. உயிரியல் பன்முகத்தன்மை, புவியியல், பண்பாடு மற்றும் அழகியல் மதிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்குத் தொடர்ச்சி மலைகள் உலகளவில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சூழலியலின் நிலையை மதிப்பிடுவதற்கும், சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டம், 1986-இன் கீழ்ச் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்களை அறிவிப்பதற்காக மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள பகுதிகளை வரையறுக்கவும், ஒரு குழு மாதவ் தனஞ்சய் காட்கில் தலைமையில் உருவாக்கப்பட்டது.

மாதவ் தனஞ்சய் காட்கில் அவர்கள் இந்தியச் சூழலியலாளர், கல்வியாளர், எழுத்தாளர், கட்டுரையாளர் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் மையத்தின் நிறுவனர் என்று பன்முகத்தன்மை கொண்ட ஆளுமை ஆவார். மாதவ் காட்கில்

இந்தியப் பிரதமரின் அறிவியல் ஆலோசனைக் குழுவின் முன்னாள் உறுப்பினராகவும், காட்கில் கமிஷன் என்று அறியப்படும் 2010. இன் மேற்குத் தொடர்ச்சி மலை பாதுகாப்பு குறித்து அறிக்கை அளித்த சூழலியல் நிபுணர் குழுவின் (WGEEP) தலைவராகவும் செயல்பட்டார். 2011 இல் அவர் மேற்குத் தொடர்ச்சி மலையின் பாதுகாப்பு குறித்த அறிக்கை மிக முக்கியமானது. அவருடைய பரிந்துரைகள் ஓரளவேனும் பின்பற்றப்பட்டு இருந்தால் இன்று வயநாடு அழிவுக்கு உள்ளாகி இருக்காது. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் 75% சூழல் பாதுகாப்புப் பகுதியாக அறிவிக்கப்பட வேண்டும் என்றார். அதற்கெனச் சூழல் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தார். காடுகளை அழித்து ஒற்றைப் பயிர்முறை, ஆறுகளின் போக்கை மாற்றி அமைத்தல், சுரங்கங்கள் அமைத்தல், அனல் மின்நிலையங்கள் அமைத்தல் ஆகியவற்றை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். குறிப்பிட்ட பகுதிகளைச் சூழலியல் உணர் திறன் கொண்ட பகுதியாக அறிவிக்கப் பரிந்துரைத்தார். கட்டுமானங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டியதை அறிவுறுத்தினார். வயநாடு உள்ளிட்டுச் சில பகுதிகளைச் சூழலியல் ரீதியாக உணர்திறன் கொண்டதாக அறிவிக்கும்படி அரசுக்கு பரிந்துரைச் செய்தார். ஆனால் அவற்றை அரசு கவனத்தில் கொள்ளவில்லை.

## கே. கஸ்தூரி ரங்கன் அறிக்கை 2013

மேற்குத் தொடர்ச்சி மலைகளுடன் தொடர்புடைய 6 மாநிலங்களில் எதுவும் காட்கில் கமிட்டி அறிக்கையை ஏற்காததால், 2012-இல் கே.கஸ்தூரிரங்கன் தலைமையில், மேற்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்பாக மற்றொரு உயர்மட்ட பணிக்குழுவை இந்திய அரசு அமைத்தது. இந்தக் குழுவின் முக்கிய நோக்கம், காட்கில் குழுவின் அறிக்கையைப் பலதரப்பட்ட முறையில் முழுமையாக ஆராய்வதும், அனைத்து மாநிலங்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளைப் பரிசீலிப்பதும் ஆகும். இந்தக் குழு தனது அறிக்கையை ஏப்ரல் 15, 2013 அன்று சமர்ப்பித்தது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் 37% பகுதியைச் சுற்றுச்சூழல் உணர்வு பகுதியாக அறிவிக்க வலியுறுத்தியதுடன், நடைபெற்றுக் கொண்டிருந்த சூழல் பாதிப்புச் செயல்பாடுகளைத் தடை செய்யும்படி இக்குழு பரிந்துரைத்தது. வயநாடு பகுதிக்கு அதிக பாதுகாப்பளிக்க இந்த அறிக்கை பரிந்துரை செய்தது.

வயநாடு உள்ளிட்ட பகுதிகளில் அனல் மின் நிலையங்கள் கட்டக்கூடாது; நீர்மின் திட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்; ஒரு கட்டுமானம் என்பது 20,000 சதுர மீட்டர் பரப்பளவை தாண்டக்கூடாது - என்பது போன்ற பரிந்துரைகளை இக்குழு செய்தது. மேற்கு மலைத் தொடரின் குறிப்பிட்ட பகுதிகளில் சுரங்கம் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தடை விதிக்க வேண்டும், அனல் மின் திட்டங்களை மேற்கு மலைத்தொடரில் அனுமதிக்கக் கூடாது என்று வலிய வலியுறுத்தியதுடன், வயநாடு பகுதியின் அதிகளவுப் பாதுகாப்புக்கு இக்குழு பரிந்துரை செய்தது.

## *மாநில அரசுகளின் பொறுப்பற்ற போக்கு

கஸ்தூரி ரங்கன் ஆய்வுக் குழு அறிக்கையை இந்திய அரசு ஏற்றது; ஆனால் மாநில அரசுகள் ஏற்கவில்லை. அன்றைய கர்நாடக முதல்வர் இந்த பரிந்துரையை ஏற்க முடியாது என்றார். பலருக்கு வேலை வாய்ப்புகளை நடைபெற்றுக் கொண்டிருந்த திட்டங்கள் அளிப்பதாகக் கூறினார். இப்பகுதியை சுற்றுச்சூழல் உணர்வு மண்டலமாக (Ecologically Sensitive zone) அறிவித்தால், அது அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என்று கூறி, கே.கஸ்தூரி ரங்கன் குழு அறிக்கையை ஏற்க மறுத்தார். வயநாடு பகுதியில் 1950 இல் 85% காடுகள் இருந்தன. 2018 இல் அங்கிருந்த காடுகளில் 62% அழிக்கப்பட்டன. வயநாட்டில் தோட்டப்பரப்பு 1500% அதிகரித்தது. இவையெல்லாம் வளர்ச்சி என்ற பெயரில் செய்யப்பட்டது. ஆனால் இவைதாம் ஒரு பேரழிவின் முன்னுரையாக அமைந்தன.

## அனைவருக்கும் முன்னுள்ள பிரச்சினை :

உலகின் ஒவ்வொரு பகுதியும் இப்போது சூழல் பிரச்சினையை எதிர்நோக்கி உள்ளது. கேரளாவில் வயநாடு மட்டுமல்ல, ஏனைய கேரளப் பகுதிகளும், தமிழ்நாட்டின் பல பகுதிகளும், வட இந்தியப் பகுதிகளும் சூழல் பாதிப்பின் காரணமாக அழிவை எதிர்நோக்கியிருக்கின்றன. 2021 பிப்ரவரி மாதம் உத்தரகாண்ட் மாநிலம் ஒரு பேரிடரைச் சந்தித்தது. நந்தாதேவி பனிப்பாறை உருகி, உடைந்து, தவுளி கங்கா ஆற்றில் நீர் பெருக்கு ஏற்பட்டது. 190 பேர் ஆற்றில் காணாமல் போயினர். கங்கையில் நீர் பெருக்கு ஏற்பட்டு கரையோர கட்டிடங்கள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டன. ஆற்றின் குறுக்கே இருந்த பாலங்கள் காணாமல் போயின. ரிஷி கங்கா, ரெய்னி நீர் மின்திட்ட தொழிலாளர்களில் 153 பேர் காணாமல் போயினர். இது ஒற்றை நிகழ்வு அல்ல. இது போல தொடர் நிகழ்வுகள் நிகழ்ந்திருக்கின்றன; இனிமேலும் நிகழும். வளர்ச்சி என்ற பெயரிலும், வசதி என்ற பெயரிலும், இயற்கையை அழிக்கும் செயல்பாடுகள் தொடரும் வரை இத்தகைய பேரிடர்களும் தொடரும்.

## புவி வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றம்:

### இத்தகைய பெருமழைகளுக்கும், வெள்ளப்பெருக்குகளுக்கும், நிலச்சரிவுகளுக்கும் என்ன காரணம்?

வளிமண்டல வெப்பம் அதிகரித்தலும், இதனால் ஏற்படும் காலநிலை மாற்றமும்தாம். புவி வெப்பமயமாதலுக்கு முக்கிய காரணம் புதைப்படிவ எரிமங்களின் எரிப்பு மற்றும் காடுகள் அழிப்பு ஆகியவை. புதைப் படிவ எரிபொருள் என்பவை நிலக்கரி, நிலத்தடியில் வெவ்வேறு ஆழங்களில் எடுக்கப்படும் எண்ணெய்□ எரிவாயு போன்றவை. நிலக்கரி, எண்ணெய் - எரிவாயு உள்ளிட்ட புதைப்படிவ எரிபொருளைத் தொடர்ந்து பயன்படுத்துவதாலும்,



இதனால் உருவாகும் கார்பன் என்னும் கரியையும் தண்ணீரையும் பயன்படுத்தி சூரியஒளியில் தனக்கான உணவை உற்பத்தி செய்து கொள்ளும் காடுகளை அழிப்பதாலும், புவி வெப்பமயமாதல் தொடர்கிறது.

இந்த அழிவுகளுக்கு மனிதர்களே காரணம். கிபி 1800 - க்குப் பிறகு புவி வெப்பம் 1.5 செல்சியஸ் உயர்ந்திருக்கிறது. புவி வெப்பமயமாதலால் உலகின் அத்தனை கட்டமைப்புமே பாதிக்கப்படுகிறது. இது சங்கிலித் தொடர் பாதிப்புகளை உருவாக்குகிறது. இந்தத் தொடர் பாதிப்புகளில் வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை, புயல்கள், கடல் மட்ட உயர்வு, மேக வெடிப்புப் பெருமழைகள், கட்டுப்படுத்த முடியாத வெள்ளம் என்று அழிவின் வடிவங்கள் தொடர்கின்றன. 1850 - தொழில் புரட்சிக்கு முன்பு உலகின் வெப்பநிலை 14 டிகிரி செல்சியஸ் ஆக இருந்தது. தொழிற்புரட்சி காலத்திலிருந்து, தொழிற்சாலைகள் பெருக்கத்தால், அவை அதிக எரிபொருட்களைப் பயன்படுத்தியதால், புவி வெப்பம் உயர்ந்திருக்கிறது. இஸ்ரோ (ISRO - Indian Space Research Organization) விஞ்ஞானிகள் ஆய்வு செய்து இதற்கான காரணத்தை

விளக்கியுள்ளனர்: நவீன தொழில் வளர்ச்சி மிதமிஞ்சிய நிலக்கரி, மீத்தேன், ஹைட்ரோகார்பன் பயன்பாடுகள், கரியமில வாயுவும், பசுங்குடில் வாயுக்களும் உருவாகக் காரணமாகின்றன. கரியமில வாயுவும், பசுங்குடில் வாயுக்களும், பூமியைச் சூழ்ந்து போர்வையாக மூடியிருக்கும் வளிமண்டலத்தில் நிறைகின்றன. சூரிய வெப்பத்தைப் பிரதிபலித்துத் திருப்பி அனுப்பாமல், வளிமண்டலம் சூரிய வெப்பத்தை உள்வாங்கிக் கொண்டு சூடாகிறது. இதனால் பனிப்பாறைகள் உருகி கடல் மட்டத்தின் உயரம் அதிகரிக்கிறது. இதன் காரணமாக உலகின் பல பகுதிகள் கடலுக்குள் மூழ்கிக் கொண்டிருக்கின்றன. புவி வெப்பமயமாதலால் கடல் நீரும் அதிக வெப்பமடைகிறது. கடல் நீர் அதிக அளவில் ஆவியாகி, மழை மேகமாகி . அளவுக்கு மீறிய பேய் மழைகளை உருவாக்குகின்றன.

தற்போதுள்ள உலகின் வெப்பநிலை 14 டிகிரி செல்சியஸ் என்பதிலிருந்து 16 டிகிரியாக உயர்ந்து விடக்கூடாது என்பதுதான் சூழலியலாளர்களின் கவலை. இந்த வெப்பத்தை 15.5 செல்சியசுக்குள் கட்டுப்படுத்தும் முயற்சியாகத்தான் பன்னாட்டு மாநாடுகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற

### பன்னாட்டு முயற்சிகள்! பாரிஸ் ஒப்பந்தம் - 2015 :

இது காலநிலை மாற்றம் குறித்த ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் காலநிலை மாற்றத்தைக் குறைத்தல் , அதற்காக நிதி அளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது . 2015 ஆம் ஆண்டு பிரான்சின் பாரிஸ் காலநிலை மாற்ற மாநாட்டில் 196 பங்கேற்பு நாடுகளால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. . 2023-நிலவரப்படி, காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டின் (UNFCCC) ஒப்பந்தத்தில் 195 உறுப்பினர்கள் பங்கு பெற்றுள்ளனர்.

2021-இல், COP26மாநாடு (Conference of the Parties (COP) to the United Nations Framework Convention on Climate Change (UNFCCC) ஸ்காட்லாந்து கிளாஸ்கோ நகரில் நடைபெற்றது. இது ஐநாவின் 26 - ஆவது பருவநிலை மாநாடு ஆகும். இம்மாநாட்டில் புவியின் வெப்பநிலையை 1.5 டிகிரி செல்சியசுக்குக் கீழே குறைப்பதற்கு உலக நாடுகள் ஒத்துக் கொண்டன. 2022ஆம் ஆண்டு COP 27 - மாநாடு எகிப்தில் நடைபெற்றது. இம்மாநாட்டிலும், படிம எரிபொருள் கைவிடுவதைப் பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. உலக அளவில் கரி உமிழ்வைக் (carbon emission) குறைப்பது பற்றி மட்டுமே பேசப்பட்டது. உலகத்தை அழித்துக் கொண்டிருக்கும் பிரச்சனையின் வேர்களை வெட்ட இன்னமும் உலக நாடுகள் உடன்படவில்லை.

### கடலுள் மூழ்கும் நிலப்பகுதிகள்:

புவி வெப்பமடைதலால், பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயர்வது குறித்து, பல நாடுகள் கவலை அடைந்துள்ளன. கிரீன்லாந்து மற்றும் அண்டார்டிகாவில் உள்ள பனிப்பாறைகள் இப்போது உருகி வருகின்றன. மெல்ல மெல்ல கடல் மட்டும் உயர்ந்து கொண்டே வருகிறது. மாலத்தீவு விரைவில் கடலுள் மூழ்கும் அபாயம் தோன்றியிருக்கிறது. மாலத்தீவு தன் மக்களைக் குடியேற்றிப் பாதுகாக்க வெளிநாட்டில் இடம் வாங்குகிறது. 2050-க்குள் இந்தியாவில் மும்பை உள்ளிட்ட நகரங்கள் கடலுள் மூழ்கும் என்று சூழலியலாளர்கள் எச்சரித்துள்ளனர். உலகில் பல நாடுகளின் நிலப்பகுதிகள் கடலுள் மூழ்குவதால் 150 மில்லியன் மக்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்தோனேசியாவின் தலைநகரம் ஜகார்த்தா இடம் மாற்றப்பட இருக்கிறது. அதை ஒட்டிய கடற் பகுதியில் ஓராண்டுக்கு 1.5 சென்டிமீட்டர் கடல் மட்டம் உயர்ந்து வருகிறது. 2050-இல் ஜகார்த்தா கடலில் மூழ்கும் என்று ஆய்வாளர் ஹென்றி ஆண்ட்ரியாஸ் கணித்துள்ளார். இந்தோனேசியாவின் சில பகுதிகளில் ஆண்டுக்கு 25 சென்டிமீட்டர் அளவிற்கு கடல் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. அதன் அடிப்படையில் கணக்கிட்டால், 10 ஆண்டுகளில் 2.5 மீட்டர் கடல் மட்டம் உயர்ந்து,2050 அளவில் ஜார்த்தா முற்றிலுமாகக் காணாமல் போகும். அவ்வாறெனில், ஜகார்தாவில் ஒரு கோடி மக்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள். இந்தியாவில் மும்பை, கொல்கத்தா, கொச்சி போன்ற நகரங்கள் ஒன்பது ஆண்டுகளில் குறிப்பிட்ட அளவிற்குக் கடலில் மூழ்கும் என்று தினமலர் ஏடு 7 நவம்பர் 2021 அன்று செய்தி வெளியிட்டுள்ளது. கடல் மட்ட நீர் உயர்வால் 50 பெரிய கடற்கரை நகரங்கள் கடலில் மூழ்கும் என்ற செய்தி வெளியாகி உள்ளது. 2030க்குள் மும்பை, கொல்கத்தாவுக்கு தெற்கே உள்ள சுந்தரவனக் காடுகள், கொல்கத்தா, ஒடிசாவில் கட்டாக், குஜராத் கடற்கரையோர நகரங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்க அளவிற்குக் கடலுக்குள் மூழ்கும். 2100ல் கடற்கரை நகரங்கள் அனைத்துமே கடலுள் மூழ்கும் அபாயம் காத்திருக்கிறது.

இன்றிலிருந்து 30 ஆண்டுகளுக்குள் ஆயிரக்கணக்கான குட்டித் தீவுகள் கடலுள் மூழ்கி விடும். ஏனெனில், ஒரு வருடத்திற்கு 270 பில்லியன் டன் பனிப்பாறைகள் உருகி கடலில் கலக்கின்றன. கிரீன்லாந்தில் உள்ள பனிப்பாறைகள் உருகினால் கடல் மட்டம் 7 மீட்டர் உயர்ந்துவிடும். ஆஸ்திரேலியாவுக்கும் ஹவாய்க்கும் நடுவில் பசிபிக் கடலில் உள்ள துவாலு (Tuvalu) என்ற தீவு - நாடு மிகப்பெரும் அச்சத்தில் இருக்கிறது. அதிலிருந்த ஒன்பது தீவுகளில் இரண்டு தீவுகள் மூழ்கிவிட்டன. மீதி உள்ளவை கடல் மட்டத்திலிருந்து மூன்று மீட்டர் உயரத்தில் உள்ளன. மாலத்தீவுகள், மார்ஜல் தீவுகள், ஃபிஜி தீவுகள், சமோவா தீவுகள்-அனைத்தும் கடலுக்குள் மூழ்கிவிடும் அபாயம் தூரத்தில் இல்லை.

இந்திய நகரங்கள் குறித்து அமெரிக்காவின் நாசா (National Aeronautics and Space Administration) ஓர் எச்சரிக்கையை அளித்துள்ளது. 2050-இல் 12 இந்திய நகரங்கள் கடலுள் மூழ்கும் என்று கூறியுள்ளது. அதுவும் 2.7 மீட்டர் அளவு ஆழத்துக்கும் கீழ் மூழ்கும் என்று தெரிவித்துள்ளது. அந்த அறிவிப்பின்படி, சென்னை, விசாகப்பட்டினம், தூத்துக்குடி, மங்களூர், கொச்சின், மும்பை உள்ளிட்ட நகரங்கள் கடலில் மூழ்கும் அபாயம் உள்ளது.

2024 ஆகஸ்ட் 4 அன்று மாலைமலர் இதழ் ஒரு செய்தியை வெளியிட்டது. 2040-ல் சென்னையின் நிலப்பரப்பில் 7% கடலுள் மூழ்கும் என்று தெரிவிக்கிறது.

1987 - 2021 க்கு இடைப்பட்ட காலக்கட்டத்தில், சென்னை கடல் மட்டம் 6.79 மில்லி மீட்டர் உயர்ந்து இருக்கிறது. கன்னியாகுமரி பகுதியில் 2100-ஆம் ஆண்டளவில் 74.7 செ.மீ அளவிற்குக் கடல் மட்டம் உயரும் என்று கணக்கிட்டுள்ளனர்.

பெங்களூரில் செயல்படும் அறிவியல் - தொழில்நுட்பம் - மற்றும் கொள்கை ஆய்வு மையம் (CSTEP - The Centre for Study of Science, Technology and Policy), சென்னை தீவுத்திடல், மயிலாப்பூர், தமிழ்நாடு அரசின் நினைவுச் சின்னம், பள்ளிக்கரணை சதுப்பு நிலம், சென்னை துறைமுகம் உள்ளிட்டவை கடலுள் மூழ்கும் என்று எச்சரித்துள்ளது. சென்னையில் மூழ்க இருப்பதாகக் கூறப்படும் 7.29% நிலப்பகுதி என்பது 86.6 சதுர கிலோமீட்டர் ஆகும். 2060 இல் சென்னை நிலப்பரப்பில் 9.65%, அதாவது சென்னையின் 114.31 சதுர கிலோமீட்டர் கடலில் மூழ்கும்.

இவ்வாறு கடல் மட்டம் உயரும் வேகம் புவி வெப்பமயமாதல் காரணமாக இப்போது அதிகரித்து வருகிறது. 2040-ல் தூத்துக்குடியில் 10% மூழ்கும் என்று தெரிகிறது.

தமிழ்நாட்டில் எண்ணூர் முதல் மாமல்லபுரம் வரை 3029.33 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கடலுள் மூழ்கும் என்று கணித்துள்ளனர்.

### காவிரிப்படுகையின் நிலை என்ன

காவிரிப் படுகையின் அழிவு இரண்டு பங்கு வேகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஒருபுறம், காவிரிப் படுகையின் நிலப்பரப்பு மேலும் மேலும் கீழ்நோக்கித் தாழ்ந்து கொண்டிருக்கிறது (subsidence); அதே நேரம், கடல் மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் நகரங்களைப் பற்றிப் பேசும் ஆய்வாளர்களும், அறிவியல் அறிஞர்களும், அரசியல் தலைவர்களும், ஒரு மூலையில்

ஒதுங்கி இருக்கும் காவிரிப்படுகை பற்றிப் பேசுவதில்லை. இதில் வியப்பு என்னவென்றால், காவிரிப்படுகை மக்களும், காவிரி படுகையைச் சேர்ந்த அரசியல் ஆளுமைகளும் இது குறித்து சிந்திப்பதில்லை.

காவிரிப்படுகையின் பெரும் பகுதி கடல் மட்டத்தைவிட ஒரு மீட்டர் அல்லது மூன்று அடி உயரத்திலேயே இருக்கிறது. இந்த மூன்று அடி உயரம் என்பது விரைவில் கடல் மட்டத்தை விடத் தாழ்ந்து போகும். காவிரிப்படுகையில் ஓஎன்ஜிசியின் எண்ணெய் -



எரிவாயுத் திட்டங்களால் நிலம் தாழ்ந்திருக்கிறது என்பது உண்மை. ஓஎன்ஜிசி-யின் எண்ணெய் - எரிவாயுத் திட்டங்கள் இன்றளவும் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எண்ணெய் - எரிவாயு பெருமளவு நீருடன் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருப்பதால், நிலத்தின் கீழே ஏற்படும் வெற்றிடத்தைச்சரி செய்ய நிலம் கீழ்நோக்கித் தாழ்கிறது.

வேளாண் மண்டலப் பாதுகாப்புச் சட்டம் (2020) புதிய கிணறுகளை அமைக்க அனுமதிக்காத நிலையில், பழைய கிணறுகளை மராமத்து செய்யப் போவதாகக் கூறிக்கொண்டு ஒவ்வொரு கிணற்றிலும் 45 முதல் 60 நாட்களுக்கு ஓ.என்.ஜி.சி. வேலை செய்கிறது. பழைய எண்ணெய்க் கிணற்றின் வாய்க்குள் சற்றே சிறிய குழாய்களைச் செலுத்தி, 1500 மீட்டர் ஆழத்தில் பக்கவாட்டில் திருப்பி, பக்கவாட்டுக் கிணறுகளை அமைக்கிறது. அக்கிணறுகள் 3 கிலோ மீட்டர் ஆழம் வரை செலுத்தப்படுகின்றன. சேல் அல்லது களிப்பறையில் அக்கிணறுகள் அமைக்கப்படுகின்றன.

காவிரிப் படுகைக்கு அருகில் உள்ள ஆழமற்ற கடற்பகுதி, ஆழமான கடற் பகுதியில் வேதாந்த நிறுவனமும், ஓ என் ஜி சி நிறுவனமும் பல நூறு எண்ணெய் - எரிவாயுக் கிணறுகள் அமைக்க முன்னமே உரிமங்களைப் பெற்றிருக்கிறார்கள். கடலுக்குள் கிணறுகளை அமைத்தாலும் அது காவிரிப் படுகையை மிகப்பெரும் அளவிற்குப் பாதிக்கும்.

நிலத்தைக் குடைந்து எண்ணெயையும், எரிவாயுவையும் தண்ணீரோடு சேர்த்து பெருமளவுக்குத் தொடர்ந்து வெளியேற்றிக் கொண்டிருப்பதால் முன்னமே காவிரிப் படுகையின் நிலப்பரப்பு தாழ்ந்து போயிருக்கிறது. ஓ என் ஜி சி நிறுவனம் எண்ணெய் - எரிவாயு மற்றும் தண்ணீரைத் தொடர்ந்து உறிஞ்சி எடுக்குமானால், காவிரிப்படுகையில் நிலம் உள்வாங்குதல் விரைவுபடுத்தப்படும்.

**கிருஷ்ணா கோதாவரி படுகையில் நிகழ்ந்த நிலம்தாழ்தல் காவிரிப் படுகையிலும் நிகழ்ந்துள்ளது:**

ஆந்திராவில் கிருஷ்ணா கோதாவரி ஆற்றுப் படுகைப் பகுதிகள் எண்ணெய் - எரிவாயுத் திட்டங்களால் 3 அடி முதல் 6 அடி வரை நிலப் பகுதிகள் தாழ்ந்து போயிருக்கின்றன. இது மிகப்பெரும் கவலையை அப்பகுதி சூழலியலாளர்களுக்கு உருவாக்கி இருக்கிறது. ஜி கிருஷ்ணராவ் என்ற ஆந்திரப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிலவியலாளர், கிருஷ்ணா - கோதாவரிப் படுகையின் உயரம் தாழ்ந்து போவது குறித்து ஆய்வு செய்தார். ஜி. கிருஷ்ணராவ் கிழக்குக் கோதாவரி பகுதி 1.5 அடி முதல் 5.4 அடி வரை நிலப்பகுதி உள்வாங்கி இருக்கிறது என்று அறிவித்திருக்கிறார் (The Hindu, 23 July 2017 ). இதை ஆய்வு செய்த ஆந்திராவில் உள்ள படுகை ஆய்வுகள் நிறுவனம் (Delta Studies Institute) தெளிவாகக் காணக்கூடிய அளவில் நிலத்தில் மாற்றங்கள் (noticeable land changes) இருப்பதாக அறிக்கை அளித்தது. கிருஷ்ணா - கோதாவரி படுகையில் என்ன நிகழ்ந்திருக்கிறதோ அது காவிரிப் படுகையிலும் நிகழ்ந்திருக்கிறது.


சான்றாக, மயிலாடுதுறை உள்ளிட்ட பழைய நாகப்பட்டினம் மாவட்டத்தின் 165 கிலோமீட்டர் தூரம் உள்ள கடற்கரையின் நிலவியலை ஆய்வு செய்து, அதன் புவியியல் அமைப்பு குறித்து, அது ஒரு "தாழ்வான கடற்கரை மண்டலம்" (the low elevation coastal zone) என்றும், சில பகுதிகள் கடல் மட்டத்தை விடவும் தாழ்வாக இருக்கிறது (below sea level) என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் (Times of India, 19 July 2023). காவிரிப் படுகையில் பல கிராமங்கள் கடல் மட்டத்திற்கும் கீழே இருக்கின்றன என்பதை அறிய பலருக்கும் வியப்பாக இருக்கும். சில பகுதிகள் மட்டும் 5 மீட்டர் உயரத்தில் இருக்கின்றன. காவிரி படுகையில் 75% நிலப்பரப்பு நிலம் தாழ்ந்து கடலுள் மூழ்கும் நிலையை அடைந்திருக்கிறது என்று டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில இதழ் ஓர் ஆய்வு கட்டுரையில் தெரிவிக்கிறது ("submergence due to land subsidence," Times of India, 19 July 2023). அது மட்டுமின்றி, படுகையின் பல இடங்கள் கடல் மட்ட அளவிற்கே, சமமாக இருக்கின்றன (0 m level).

இந்நிலையில் நம் முன் உள்ள கேள்வி இதுதான் : கடல் மட்டத்தை விட அதிக உயரத்தில் இல்லாத காவிரிப்படுகையில், மேலும் நிலம் உள் வாங்கினால், அதே நேரம் கடல் மட்டமும் உயர்ந்து வந்தால், காவிரிப் படுகை என்னவாகும்? காவிரிப் படுகையின் பெரும்பகுதி கடலுக்குள் போய்விடும் என்பதை எவராவது நமக்கு உணர்த்த வேண்டுமா? இப்படி ஒரு பேரழிவு இருக்கிறது என்பதை இன்னமும் நாம் உணரவில்லை.

பேரழிவும், பெருந்துயரும் எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் வரலாம். இன்று நிலச்சரிவு ஏற்பட்டு வயநாடு மண்ணால் மூடப்பட்டிருக்கிறது. நாளை காவிரிப்படுகை பேரழிவுத் திட்டத்தால் நிலம் உள்வாங்கப்பட்டுக் கடல் நீரால் மூடப்படும். இரண்டிற்கும் இடையில் என்ன வேறுபாடு இருக்கிறது? வரலாற்றுப் புகழ் மிக்க, தமிழர்களின் பண்பாடு செழித்த, ஏராளமான தொல்லியல் சான்றுகளைத் தன் வயிற்றுக்குள் உள்ளடக்கி வைத்திருக்கக் கூடிய, இன்றளவும் தமிழ்நாட்டு மக்களுக்குச் சோறு போட்டுக் கொண்டிருக்கும் உணவுக்கலமாக இருக்கக்கூடிய, தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டங்களின் மூலம் குடிநீரை வழங்கிக் கொண்டிருக்கக் கூடிய, இந்த காவிரிப்படுகையை இழந்துவிட்டால் தமிழினம் வாழுமா?

இன்று வயநாடு, நாளை காவிரிப்படுகை! காவிரிப்படுகையின் இருப்பு தமிழினத்தின் இருப்புக்கு மிகவும் தேவை!

**பன்னாட்டு முதலாளிகளின் கொள்ளை வெறியால் உலகமே வெப்பமாகி விரைவில் அழியப் போகிறது.! அழிவைக் கடவுளோ பிறர் யாருமோ வந்து காப்பாற்ற முடியாது.. உழைக்கும் மக்கள்தாம் அவர்களை விரட்டிவிட்டு உலகைக் காப்பற்ற வேண்டும்!**






# பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள்

### அணியமாகிக் கொண்டிருக்கின்றன..




===============

**16 தொகுதிகள்**

========================================

**இன்னும் இரண்டு மாதத்தில்**
**வெளியீட்டு நிகழ்ச்சி நடக்க இருக்கிறது..**

========================================

**பதினாறு தொகுதிகளும் 12,000 உருவா..**
**முன் வெளியீட்டுத் திட்டத்தில் பதிவு செய்வோர் 10,000 உருவா..**
**கட்டினால் போதும்..**

==================

**10 இணைகளுக்கு முன்பதிவு செய்வோருக்கு.. (ஓர் இணை அன்பளிப்பாக)**
**11 இணையாகத் தரப்பெறும்..**
**செப்டம்பர் 2024 இறுதிக்குள் பதிவு செய்யுங்கள்..**

==============

**தொடர்புக்கு:**
**9841668320, 9092948002**

# தன்னாட்சி வேண்டும்!

பெற்றுவிட வேண்டும்,
தமிழகம் பெற்றுவிட வேண்டும்,
தன்னாட்சி பெற்றுவிட வேண்டும்!

முற்றும் நினைத்தே உரைக்கும் உரையிது!
முழுமையாய் என்றைக்கும் மாற்றம் இலாதது!
(பெற்று)

ஒற்றுமை ஒற்றுமை என்பதால் யார்க்கும்
உருவான பயனென்ன? யார்க்கது ஏற்கும்?
வெற்று நினைப்பினில் வாழந்திட லாமோ?
விலகுதல் பகையெனப் பொருள்கொள்ள லாமோ?
(பெற்று)

கற்றும் கல்லாதவர் போல், இந்த நாட்டில்
கணக்கிலா மதங்களும் குலங்களும் கொண்டோம்!
தொற்றும் பிணிகளைப் போல்மூடப் பழக்கம்;
தொலையாத போராட்டம்; ஓயாத தொல்லை!
(பெற்று)

தில்லிக்குப் போவதும் வருவதும் ஒன்றே
தெற்கினில் உள்ள அமைச்சர்கள் வேலை!
மல்லிக்குச் சுக்கொன்று வேண்டுவ தென்றால்
மாதங்கள், ஆண்டுகள் காத்திடல் நன்றோ?
(பெற்று)

வடக்கிலோ மேன்மேலும் அதிகார வீக்கம்;
வருமான வீழ்ச்சியோ தெற்கி னைத்தாக்கும்!
இடக்குசெய் இந்தியும் இடைஇடைத் தொல்லை!
எத்தனை நாளைக்கோ இத்துன்ப எல்லை?
(பெற்று)

நாளுக்கு நாள்ஏழை நலிவையே கண்டான்; “
நாடாளும் பதவிகள் பணக்காரன் கொண்டான்;
தோளுக்குச் சுமைமேலும் மிகுகின்ற போதில்
தொந்திக்கு விருந்திசை கேட்கின்றோம் காதில்!
(பெற்று)

உழைப்பவர் வாழ்க்கையில் துயர்காணல் நன்றோ?
உயர்வான திட்டங்கள் செயலாதல் என்றோ?
பிழைப்பெல்லாம் செல்வர்க்கே பேச்சென்ன பேச்சோ?
பிறநாட்டில் கையேந்தும் வாழவென்ன வாழ்வோ?
(பெற்று)

இராப்பகல் உழைப்பவன் சாகின்றான் நாட்டில்;
ஏய்ப்பவன் துய்க்கின்றான் உயர்மாடி வீட்டில்!
வராப்பயன் வந்ததாய் முழங்குகின் றீர்கள்;
வாய்ச்சொல்லால் முழக்கத்தால் என்னகண் டீர்கள்?
(பெற்று)

1970 **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

**தமிழ்நாடு இதழுக்காக நன்கொடை வழங்கியவர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு இதழ்க் குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது..**

| | |
|---|---|
| திரு. தென்முகநம்பி , சென்னை | 1000 |
| தோழர் செங்குட்டுவன், ஆவடி | 500 |
| தோழர் இரா. உதயகுமார், கீரமங்கலம் | 500 |
| முனைவர் முத்தமிழ், சென்னை | 850 |